திருவள்ளுவர் ஆண்டு 2040

பிப்ரவரி - 2010

# செந்தமிழ்

தொகுதி : 54
பகுதி : 4

திங்கள் இதழ்

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் **2010, சனவரி திங்கள் 23ஆம் நாள் 53வது பட்டமளிப்பு விழா** மிகச் சிறப்பாக நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகத் தமிழக அரசு தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் **திரு. கூ.வ. எழிலரசு** எம்.ஏ., எம்.பில்., பி.எட். அவர்கள் கலந்துகொண்டு தமிழ் பி.ஏ. பிலிட்., எம்.ஏ., எம்.பில் பட்டம் பெற்ற 170 மாணவர்களுக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். தமிழ் படித்தவர்களால் தான் அனைத்துத் துறைகளிலும் சாதனை செய்ய முடியும் என்று சிறப்புரை ஆற்றினார். தமிழ் வளர்ச்சித் துறையின் முன்னாள் இயக்குநர், முனைவர் சக்தி **த. பெரியாண்டவர்** அவர்கள் தனது அனுபவ முத்திரையைப் பதித்து வாழ்த்துரை வழங்கினார். செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திரு. **இரா. குருசாமி** பி.ஏ. அவர்கள் தலைமை தாங்கி தனது தலைமையுரையில் தமிழ்ப் பட்டம் பெற்றவர்களுக்குத் தமிழக அரசு வேலைவாய்ப்புத் துறைகளில் முன்னுரிமை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு. **இரா. அழகுமலை** எம்.ஏ,. எம்.பில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்க மத்திய அரசு வழக்கறிஞர் திரு. **சு. வீரணசாமி** அவர்களும் ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. **க. முத்தையா பசும்பொன்** அவர்களும் வாழ்த்துரை வழங்க பட்டமளிப்புவிழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 54
பகுதி : 4
பிப்ரவரி 2010

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---


**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

உமாதரன் 4

புலவர். க. தண்டபாணி

தமிழின் செம்மொழித் தகுதி பற்றிய அறிக்கை 6

முனைவர் ஜார்ஜ் எல். ஹார்ட்டு

உ.வே.சா.வின் தமிழியல் சிந்தனைகள் (குறுந்தொகை) 13

திரு. க. பூபதி

தமிழ் உரைநடையில் தடம் பதித்தோர் ராவ்சாகேப் மு. இராகவையங்கார் 21

முனைவர். இ.கி. இராமசாமி

பெருந்தேவனாரின் கவிநயமும், கலைநயமும் 24

திரு. த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்.ஃபில்.

பாஸ்கர சேதுபதியின் பாதை 27

திரு. இரா. இராஜமோகன்

# இதழ் மணம்

அன்புடையீர்,

தமிழ் உள்ளங்களுக்கு வணக்கம்.

தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக மக்களிடையே திறமைகள் பல பெருகி வந்தாலும், மரபான பல திறன்கள் மறைந்து வருகின்றன. அதுபோல மடக்கு அணி என்னும் இலக்கியப் புலமைத் திறன் அருகியுள்ளது. அதனை நினைவுகூரும் வகையில் புலவர் க. தண்டபாணி தன் விளக்கவுரையைத் தந்துள்ளார்.

தமிழின் செம்மொழித் தகுதி குறித்து கலிபோர்னியா பல்கலைக்கழகத் தமிழியற்புலத் தலைவர் முனைவர் ஜார்ஜ் எல். ஹார்ட்டு ஆய்வறிக்கை நல்கியுள்ளார். சிறந்த ஆய்வுக் கண்ணோட்டத்துடன், தற்சார்பற்ற நிலையில் ஆய்வுப் பொருளை நிறுவியுள்ள பாங்கினை நம் செந்தமிழ் இதழ் பாராட்டி மகிழ்கிறது.

உ.வே.சா.வின் உரைத்திறனின் சிறப்பை திரு.பூபதி திறனுற வெளிக்காட்டியுள்ளார்.

தமிழறிஞர் மு. இராகவையங்கார் நினைவைப் போற்றும் வகையில் முனைவர் இ. சி. இராமசாமி தம் கட்டுரையில் அன்னாரின் சிறப்புத்திறனை வழங்கியுள்ளார்.

பெருந்தேவனாரின் இலக்கியப்படைப்புத்திறனை திரு. செந்தமிழ் செல்வன் வெளிக்காட்டியுள்ளார்.

தன்னிகரில்லாத ஆட்சியாளர், கொடைவள்ளல் பாஸ்கர சேதுபதி அவர்களின் தமிழ்ப் பணியையும், சமூகப் பணியையும் ஆய்வாளர் சி. ராஜமோகன் சிறப்புற எடுத்தியம்பியுள்ளார்.

செந்தமிழ்க்கல்லூரியின் பட்டமளிப்பு விழாச் சிறப்புச் செய்தியையும் கொண்டு இம்மாத இதழ் நம் கையில் தவழ்கிறது.

*இனி நீங்களும் இதழும்....*

முனைவர் க. சின்னப்பா

# உமாதரன்

புலவர் க. தண்டபாணி

தமிழ்மொழியில் அணிஇலக்கணம் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் ஒன்றாகும். இந்நூலில் மடக்கு என்னும் அலங்காரம் உள்ளது. ஒரு செய்யுளில் வந்த எழுத்தோ அல்லது வந்த சொல்லோ அல்லது வந்த அடியோ மீண்டும் வந்து வேறு பொருள் தருவதை மடக்கு என்று அந்நூல் மொழிகிறது. ஒரு செய்யுளில் நான்கு அடிகளும் ஒரேவிதமாக மடங்கி வேறு பொருள் தருமாயின் அது நான்கடி மடக்கு என்று பெயர் பெறுகிறது. இந் நான்கடி மடக்கிற்குத் தண்டியலங்காரம் விளம்புகின்ற எடுத்துக்காட்டுச் செய்யுள் வருமாறு

*உமாதர னுமாதர*
*னுமாதர னுமாதர*
*னுமாதர னுமாதர*
*னுமாதர னுமாதரன்*

இச் செய்யுளில் நான்கடிகளும் சிவபெருமானைப் பற்றியே நவில்கின்றன. இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் ஒன்றாய் வந்தமையான் இச் செய்யுள் வஞ்சித்துறை என்றவாறு. இச் செய்யுளைச் சீர் பிரித்துக் காணலாம்.

**உமாதரனும் + ஆதரனும் + மாதரனும் + மாதரனும் + ஆதரனும் + மாதரனும் + மாதரனும் + மாதரன்.**

இவ்வெட்டுச் சொற்களுக்கும் நிறுத்த முறையானே பொருள் காணலாம்.

1. **உமாதரனும்:** உமாதேவியைத் தன்னுடலில் பாதியாகத் தரித்தவனும் - அணிந்தவனும்

**2. ஆதரனும்** : பக்தர்களை ஆதரிக்கின்றவனும் காக்கின்றவனும்

**3. மாதரனும்** : மா – மான். மானைக் கையில் தரித்தவனும் பிடித்தவனும்

**4. மாதரனும்** : மா – திரு. திருமகளை உறவாகத் தரித்தவனும் – பெற்றவனும்

**5. ஆதரனும்** : ஆ – பசு. பசுக்கூட்டத்தை ஆதரித்தவனும் – காத்தவனும்

**6. மாதரனும்** : மா – யானை. யானைத் தோலைத் தரித்தவனும் – அணிந்தவனும்

**7. மாதரனும்** : மா – விலங்கு – எருது. எருதை நடத்துவானும்

**8. மாதரன்** : மா – பெருமை. பெருமையைத் தரித்தவன் பெருமை உடையவன் சிவன்.

உமாதேவியைத் தன் உடலில் பாதியாக அணிந்தவனும் பக்தர்களைக் காப்பாற்றுகின்றவனும் மானைக் கையில் பிடித்தவனும் திருமகளை உறவாகப் பெற்றவனும் பசுக்கூட்டத்தைக் காத்தவனும் யானைத் தோலை அணிந்தவனும் இடபத்தை நடத்துபவனும் பெருமையுடையவனும் சிவன் என்பதே இச் செய்யுளின் பொருளாம்.

அக்காலப் புலவர்கள் இது போன்ற அரிதிற் பொருள் காணும் செய்யுட்களை விரும்பி இயற்றினர். அக்காலச் கலைஞர்களும் இது போன்ற செய்யுட்களை விரும்பிக் கற்றனர். அத்துடன் இயற்றியவர்களைப் புகழ்ந்து பரிசளித்து மகிழ்ந்தனர்.

# தமிழின் செம்மொழித் தகுதி பற்றிய அறிக்கை

முனைவர் ஜார்ஜ் எல். ஹார்ட்டு
தலைவர், தமிழியற்புலம்
கலிபோர்னியா பல்கலைக்கழகம்
பருக்கிலி

கட்டுரையாசிரியர் பற்றி அவரே....

தமிழ் மொழியைச் செம்மொழி எனக் கூறும் நிலைப்பாடு பற்றி, அதன் தகுதி நிலை பற்றி எழுதுக' என்று என் அன்பிற்குரிய நண்பர் பேராசிரியர் இ. மறைமலை அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார். அவரது வேண்டுகோளுக்கிணங்க நான் இச்சிறு விளக்கவுரையை எழுத முற்பட்டுள்ளேன். இப் பணி எனக்கு மிகப்பெரு மகிழச்சியளிப்பதாகும்.

நான் அமெரிக்காவில் உள்ள, பர்க்லி நகரில் அமைந்துள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில், 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பேராசிரியனாகப் பணிபுரிந்து வருகிறேன். நான் தற்போது அப் பல்கலைக் கழகத்தின் தமிழியல் புலத்தின் (தமிழ் இருக்கைக்கு) தலைவனாக உள்ளேன். நான் 1970 ஆம் ஆண்டில் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் வடமொழி (சமஸ்கிருதம்) இலக்கியம் பயின்று பட்டம் பெற்றேன். நான் முதற்கண், மாடிசன் நகரில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக் கழகத்தின் வடமொழிப் பேராசிரியனாக 1969இல் கல்விப் பணியிற் சேர்ந்தேன். தமிழ், சமஸ்கிருதம் (வடமொழி) ஆகிய இருமொழி இலக்கியங்களை நான் முறையாகக் கற்றுத் தேர்ந்துள்ளேன். இவற்றுடன், ஐரோப்பியச் செம்மொழிகளான இலத்தீனம், கிரேக்கம் ஆகிய இருமொழி இலக்கியங்களையும் நான் விரிவாகக் கற்றுத் தேர்ந்துள்ளேன். இம்மொழிகள் அனைத்திலும் உள்ள நூல்களை மூல மொழியிலேயே கற்றுச் சுவைத்துள்ளேன் என்பதனை இங்குக் குறிப்பிட விழைகிறேன். நான் தற்கால ஐரோப்பிய மொழிகளின் இலக்கியங்களையும், மொழி ஒப்பியலையும் நன்கு கற்றுள்ளேன். எனக்கு ரசியன்,செருமன், பிரெஞ்சு ஆகிய மொழிகள் தெரியும்; அம் மொழிகளின் இலக்கியங்களை மிக விரிவாகப் படித்துள்ளேன். அவற்றைப் போலவே, தற்கால இந்திய மொழிகளில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் இலக்கியங்களை மூல

மொழிளிலும் அவை நீங்கலாக, மற்ற எல்லா மொழியிலும் உள்ள இலக்கியங்களை மொழியாக்கம் வாயிலாகவும் நான் விரிவாகப் படித்துள்ளேன். நமது காலத்தில் வாழுகின்ற தெலுங்கு மொழி அறிஞர்களுள் தலைசிறந்தவராக விளங்குபவரான திருமிகு வி. நாராயணராவ் அவர்களுடன் நான் தெலுங்கு மொழி இலக்கியங்கள் குறித்து மிக நீண்ட நாள்கள் விவாதித்திருக்கிறேன்; எனவே, குறிப்பாக அம் மொழியின் மரபுகளை நான் நன்குக அறிந்திருக்கிறேன். தெற்கு ஆசியவியல் துறையின் உறுப்பினராக நான் நீண்ட காலமாக இருந்து வருகிறேன். எனவே, இந்தி மொழி இலக்கியம் பற்றியும் அதன் செழுமை பற்றியும் நான் கற்றுக்கொள்ளும் நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தேன்; மகாதேவி வர்மா, துளசி, கபீர் ஆகிய பெருமக்களின் (இந்திமொழி) இலக்கியப்படைப்புகளையும் நான் மிக விரிவாகப் படித்தறிந்துள்ளேன்.

மிகப் பல ஆண்டுகளை, (1963ஆம் ஆண்டு தொடங்கி) எனது வாழ்வின் மிகப் பெரும் பகுதியை, சமஸ்கிருதம் கற்பதில் செலவிட்டுள்ளேன். காளிதாசர், மகர் ஆகிய இருபெரும் புலவர்கள் வடமொழியில் எழுதிய ஒப்பற்ற இலக்கியச் செல்வங்களை மூலமொழியிலேயே நான் படித்துச் சுவைத்திருக்கிறேன்; அது போன்றே பாரவி, ஸ்ரீஹர்ஷர் ஆகியோரின் (சமஸ்கிருத) இலக்கியப் படைப்புகள் சிலவற்றையும் நான் படித்துள்ளேன். 'இருக்கு' வேதத்தின் ஐந்தாம் பகுதியாக விளங்கும் நூலை முழுமையாகவும், அதன் வேறுபல பிரிவுகளை மூலத்திலும் படித்துள்ளேன். இதனைப் போன்றே சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள உபநிடதங்கள் (உபநிஷத்துகள்) பலவற்றையும், மகாபாரதம் எனும் காவியத்தின் பெரும்பகுதியையும் , 'கதாசரித் சாகரம்' எனும் பெருநூலையும், ஆதி சங்கரரின் படைப்புகளையும் இன்னும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ள எண்ணற்ற பல நூல்களையும் நான் படித்துச் சுவைத்துள்ளேன்.

எனது கல்விச் செருக்கையும் புலமைச் சிறப்பையும் காட்டுவதற்காக நான் இவற்றையெல்லாம் இங்கே பட்டியலிடவில்லை. அதற்கு மாறாக, ஒரு மொழியைச் 'செம்மொழி' என்று முடிவுகூறுவதற்கும் அதனுடைய இலக்கியத்தைச் 'செவ்வியல் இலக்கியம்' என்று ஆராய்ந்து தேர்ந்து எடுத்துரைப்பதற்கும் எனக்கு உள்ள தகுதி இஃது என்பதை நிலைநாட்டுவதற்காகவே நான் இவற்றைக் கூற வேண்டியதாயிற்று.

செம்மொழி குறித்து ஒருவர் எந்த விதமான அடிப்படை விதிகளைத் தேர்ந்து வைத்துக்கொண்டு, அவற்றையொட்டிப் பரிசீலிக்க முனைந்த போதிலும், 'தமிழ்மொழி உலகின் மிகவுயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும் மரபு செல்வங்களையும் பெற்றுத் திகழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று' என்பதனை எவ்விதத் தயக்கமும் இன்றித் தெளிவாக அறுதியிட்டுக் கூற இயலும்.

இவ்வாறு கூறமுனைவதற்குக் காரணங்கள் பலவுள்ளன. அவற்றை இனி ஒவ்வொன்றாக எடுத்து விளக்கலாம்.

முதலாவதாகத் தமிழ்மொழி மிகுந்த பழைமைச் சிறப்பு வாய்ந்த மொழி. ஏனைய தற்கால இந்திய மொழிகளின் இலக்கியங்களுக்கெல்லாம் காலத்தால் மிகவும் முற்பட்ட, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கும் அதற்கும் மேலும் முற்பட்ட பேரிலக்கியங்களைக் கொண்டது தமிழ் மொழி. தமிழில் மிகப் பழம்பெருநூல் தொல்காப்பியம். தொன்மைக்காலக் கல்வெட்டுகளிலிருந்து, இந்நூலின் பகுதிகள் காலத்தால் மிக முற்பட்டவை எனவும் ஏறத்தாழ கி.மு. 200க்கு முற்பட்டவை எனவும் தெரிகின்றது. பழந் தமிழரின் பேரிலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகும் ; அவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகை நூல்களும் பிறவும் ஆகும். அவை ஏறத்தாழ கி.பி. முதல் இரு நூற்றாண்டுகளில் எழுந்தவை. அவை வடமொழியில் காளிதாசரின் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டன. மதச்சார்பற்ற இந்தியாவில், முதன் முதலில் எழுந்த மதச்சார்பற்ற பெருங்கவிதை இலக்கியத் தொகுப்பு (சங்க இலக்கியங்கள்) என்றால் அது மிகையாகாது.

இரண்டாவதாக, தமிழ் இந்தியாவில் தோன்றிய, இந்திய மண்ணிற்கு மட்டுமே தனிச் சிறப்பான இலக்கிய மரபினைக் கொண்டது; இந்த இலக்கிய மரபு வடமொழியிலிருந்து பெறப்பட்டது அன்று என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையைச் சொல்வதானால், தென்னாட்டில் (தென்னிந்தியாவில்) சமஸ்கிருத மொழியின் செல்வாக்கு வலிமை பெறுவதற்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன. அதனால்தான், தமிழ் இலக்கியங்கள் யாவும், வடமொழியில் அல்லது

வேறு இந்திய மொழிகளில் உள்ள எந்த இலக்கியத்தையும் போல இல்லாமல், தன்மையால் இயல்பாய் முற்றிலும் மாறுபட்டுச் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன.

சிறந்த இலக்கியக் கொள்கை , விழுமிய இலக்கண மரபுகள், உயர்ந்த முருகியற் செழுமை, இவை அனைத்திற்கும் மேலாக, தனித்து விளங்கும் தனக்கேயுரிய மிகப் பெரிய இலக்கியச் செல்வம் ஆகியவற்றைக் கொண்டிலங்குவது தமிழ் மொழியாகும். வடமொழியிலோ வேறு எந்த இந்திய மொழியிலோ காணப்படாத, அவற்றிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டு விளங்குகின்ற, இந்தியப் பெருநாட்டினுக்கு உரித்தான (இந்திய மக்களிடம் காணப்படுகிற) கலைநயம் தோய்ந்த ஒருவகை நுட்ப உணர்வைத் தமிழ் இலக்கியங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன. வளமிக்க விரிந்து பரந்த அறிவின் மாட்சியும் மரபும் அவற்றின் கண் பெரிதும் இடம்பெற்றிருக்கின்றன.

மூன்றாவதாக, தமிழ் மொழியின் செவ்வியல் இலக்கியங்களின் தன்மை, அவற்றைச் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம், சீனம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகளில் எழுந்து விளங்கும் பேரிலக்கியங்களுக்கு நிகராக (அவற்றுடன் ஓரணியில் வைத்து) எண்ணத்தக்க நிலையை, தகுதியை அவற்றுக்கு வழங்குகிறது. தமிழ் இலக்கியங்களின் சொற்செறிவும், பொருளாழமும், அவற்றின் நுட்பமும், திண்மையும், அகலமும், விரிவும், அவை நுவலும் பல்வேறு பாடுபொருள்களும் களமும் நவீன காலத்திற்கு முந்தைய (இந்திய இலக்கியங்கள் மட்டுமே, சமூகத்தில், தாழ்வுற்ற, பிற்பட்ட, கடைப்பட்ட மக்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ளன.) அவற்றின், மனிதகுலம் அனைத்தையும் வயப்படுத்தும் உலகளாவிய கோட்பாடும் தமிழ் மொழியை உலகம் தழுவிய மிகப்பெரிய செவ்வியல் மொழி, மரபுகள், இலக்கியங்களுடன் ஒருங்கே வைத்து, அவற்றுள் ஒன்று எனப் போற்றும் தகுதி நிலைமையை அளிக்கின்றன. வான்புகழ் வழங்கிய திருக்குறள், ஒழுக்கநெறிகளைக் கற்பிக்கும் உலகின் தலைசிறந்த அறநூல் என்பதனை அனைவரும் அறிவோம். எனினும் இந்த நூல், தமிழில் செவ்வியல் மொழி, இலக்கிய மரபுகளைத் தம்முள் கொண்டு விளங்குகிற, ஒன்றிலிருந்து ஒன்று பெரிதும் வேறுபட்ட பாடுபொருள்களை உடைய, பல்வேறு பெருநூல்களின் தொகுப்பில்

(பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள்) ஒன்றாகும். இந்தப் பேரிலக்கியத் தொகைநூல்களின் வாயிலாக, மனிதகுல வாழ்வியலின் ஒவ்வொரு பரிமாணமும், ஒவ்வொரு தோற்றமும் மிக நுட்பமாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன; இந்த இலக்கியப் படைப்புகளின் ஆய்வுக்குட்படாத, இவற்றின் ஒளிபடாத வாழ்வியல் துறைகளே இல்லை எனலாம்.

இறுதியாக, தமிழ்மொழி நவீனகால இந்தியப் பண்பாடு, மரபுகளின் முதன்மையான, தனித்துவம் உடைய வாயில்களில் ஒன்றாக விளங்குகிறது. சமஸ்கிருதக் கவிதை மரபின் மீது தென்னக மரபுகளின் செல்வாக்கைப் பற்றி நான் மிக விரிவாக எழுதியுள்ளேன். இதற்கு நிகராக இன்னொரு முக்கியச் செய்தியும் உண்டு; தமிழில் சங்கத்தொகை நூல்களின் காலத்தில் தோன்றிப் பரவத் தொடங்கிய இந்து சமயச் சார்புடைய, புனிதமான (வழிபாட்டுப்) பேரிலக்கியங்கள் நவீனகால (இந்திய) இந்து சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளன. அந்தப் பக்தி இலக்கியச் சிந்தனைகளும் கருத்துகளும் (தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் எழுந்த) பாகவத புராணத்திலும் ஏனைய நூல்களிலும் எடுத்தாளப்பெற்று, அவற்றின் வழியாக, இந்தியத் திருநாடு முழுவதும் பரவின. வேதங்களுக்கு ஒப்பானவை என்று போற்றப்படும் புனிதமான சமய (பக்தி) இலக்கியங்கள் தமிழிலுள்ளன; இவை தமிழுக்கே உரியன. இவை தென்னிந்திய வைணவத் திருக்கோவில்களில் (திருப்பதி முதலானவை) வேத மந்திரங்களுடன் சேர்த்து ஓதப்பெறுகின்றன. தற்கால இந்தோ-ஆரிய மொழிகளுக்கு எவ்வாறு வடமொழி (சமஸ்கிருதம்) மூலமொழியாக விளங்குகிறதோ அதேபோன்று தற்காலத் தமிழ், மலையாள மொழி இலக்கியங்களுக்குச் செவ்வியல் மொழியாகத் திகழ்ந்த தொன்மைத் தமிழே மூல மொழியாக விளங்குகிறது. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில், சமஸ்கிருதம் மிகமிகப் பழையது, தொன்மையானது; கால வகையில் சிறிதளவும் மாறாது, மாற்றத்திற்கு இடங்கொடாது, இன்றளவும் பழைமைக்குப் பழைமையாக இருந்து வருகிறது. அதேபோன்று, திராவிட மொழிகளில் தமிழ் முன்னைப் பழைமைக்கும் பழைமையாக மிகவும் தொன்மையானதாக இருந்துவருகிறது. எனினும், திராவிட மொழிகளின் இயல்பையும் வளர்ச்சியையும் புரிந்துகொள்ள மொழியியலாளர்கள்

நாடவேண்டியதும் அவர்களுடைய ஆய்வுகளுக்கு உதவும் உரைகல்லாகத் (கட்டளைக்கல்) திகழ்ந்து வருவதும் தமிழேயாகும்.

தமிழ் செம்மொழியாக இன்னும் அங்கீகரிக்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பது ஏன் என்பதனை விளங்கிக்கொள்ள முடியாத வகையில் இதற்கு ஒரேவோர் அரசியல் காரணம் மட்டுமே இருப்பதாக நான் அறிகிறேன். அதாவது, தமிழ் செம்மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஏனைய இந்திய மொழிகளும் இது போன்ற தகுதியை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக இருக்கலாம். இந்த அச்சமும் கவலையும் தேவையற்றவை. தற்கால இந்திய மொழிகளின் செழுமையையும் வளத்தையும் நான் மிக நன்றாக அறிவேன் - ஆம், அவை செழிப்பாற்றலும், விளைவிக்கும் (உற்பத்தித்) திறனும் உடைய உலகின் மிகச் சிறந்த மொழிகளின் வரிசையில் இடம் பெறுவன என்றும் நான் அறிவேன். அவை ஒவ்வொன்றும் சிறப்பான தற்கால இலக்கியங்களை ஈன்றெடுத்துள்ளன. (அவற்றில் சில மொழிகளில் தலை சிறந்த இடைக்கால இலக்கியங்களும் தோன்றியுள்ளன); அவ்வாறு எழுந்த இலக்கியங்கள் உலகின் மிகப்பெரிய இலக்கியங்கள் எவற்றுடனும் ஒன்றாக வைத்து எண்ணத்தக்க உயர்வுடையன. அவ்வாறிருப்பினும், அந்த மொழிகளுள் எவையும் செம்மொழி அல்ல. ஆங்கில மொழியையும் ஏனைய நவீனகால ஐரோப்பிய மொழிகளையும் போன்று (இவற்றில் கிரேக்கம் மட்டும் விதி விலக்கானது) அவை (அதாவது, மேற்சொன்ன ஏனைய இந்திய மொழிகள்) யாவும், முன்னரே காலூன்றிப் பிற்காலத்தே எழுந்த அவையனைத்தும் இரண்டாம் ஆயிரம் ஆண்டு தொடங்கியபின் (கி.பி. 1000க்குப் பின்னர்) வளர்ச்சி பெற்றவையாகும். கிரேக்க மொழி, ஐரோப்பியாவில் தோன்றிய ஓர் உயர் தனிச் செம்மொழி என்று உலகமனைத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இந்நிலை ஐரோப்பாவைச் சேர்ந்து பிரெஞ்சு மக்கள் அல்லது ஆங்கில மக்கள் தத்தம் மொழிகளுக்குச் செம்மொழித் தகுதிநிலை வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்க வழிகோலவில்லை.

ஒரு மொழி செவ்வியல் மரபு உடையது என்று அழைக்கப்படுவதற்குத் தகுதிபெற வேண்டுமெனில், அது பல்வேறு

அடிப்படை விதிமுறைகளுக்குப் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்; அவையாவன்; அது தொன்மை மிக்கதாக, பழைமைச் சிறப்பு வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்; அது இன்னொரு மொழிமரபில் கிளைத்து வளர்ந்ததாக இல்லாமல், தனக்கேயுரிய தனித்துவமுடைய மொழி மரபினைப் பெற்றதாகவும் அம் மொழிமரபு பெரிதும் தானே படைத்த இலக்கியச் செழுமையில் வளர்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்; இதற்கெல்லாம் மேலாக அம் மொழி விரிந்து பரந்து வளம் செறிந்த தொன்மை வாய்ந்த பேரிலக்கியச் செல்வத்தைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

இந்தியாவின் ஏனைய தற்கால மொழிகளைப் போல் அல்லாமல், தமிழ் இம்மூன்று அடிப்படைத் தேவைகளையும் ஒருங்கே நிறைவு செய்கின்றது. தமிழ்மொழி முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழைய மொழி (இலத்தீனத்தைப் போன்று மிகப் பழைமை வாய்ந்தது; அரபு மொழியினும் மிகத் தொன்மையானது); முற்றிலும் தனித்துவமுடைய, தனக்கேயுரிய, மொழி மரபில் தோன்றி வளர்ந்தது; அதன் மீது சமஸ்கிருதமோ ஏனைய மொழிகளோ எவ்விதத் தாக்கமும் செல்வாக்கும் ஏற்படுத்தவில்லை. அதனுடைய தொன்மை இலக்கியங்கள் விவரிக்க ஒண்ணாத அளவிற்கு மிக விரிந்து பரந்து பட்டவை; மிகச் செழுமையானவை.

தமிழ் ஒரு செவ்வியல் மொழி என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காக நான் இதைப் போன்று ஒரு கட்டுரை எழுத வேண்டியுள்ளது என்ற எண்ணமே எனக்கு இயல்புக்கு மாறானதாக, விந்தையானதாகத் தோன்றுகிறது. இச் செயல் எப்படி இருக்கிறது என்றால், இந்தியா ஒரு மிகப் பெரிய நாடு, இந்து சமயம் உலகின் மிகப்பெரிய சமயங்களில் ஒன்று என்னும் கூற்றை நிலை நாட்ட முற்படுவது போன்றுள்ளது. தமிழும் உலகின் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்னும் தகுதி நிலை, இப்பொருள் பற்றி நன்கறிந்த அறிஞர் குழாத்தில் உள்ள எவருக்கும் எளிதில் விளங்குகிற மிகத் தெள்ளத் தெளிவான கருத்து ஆகும். தமிழ் செவ்வியல் மொழி என்னும் தகுதி நிலையை மறுக்க முனைவது இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கும் வளமைக்கும் இன்றியமையாத மையக்கூறாக விளங்கும - உயிராதாரமாக விளங்கும் - உறுப்பு ஒன்று அதற்கு இருக்கக் கூடாது என்று மறுக்க முனைவதற்கு ஒப்பானதாகும்.

# உ.வே.சா.வின் தமிழியல் சிந்தனைகள் (குறுந்தொகை)

திரு. க. பூபதி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இலக்கியம் என்பது உலகமாந்தர் அனைவரையும் ஒருங்கிணைக்கும் மொழியாக விளங்குகிறது. அது பண்பாட்டு எல்லைகளையும், இடர்கள் அனைத்தையும் தாண்டி மனங்களைத் தொடர்புபடுத்தும் அருவியாகவும் அமைகிறது. அனைத்துலக நோக்கில் மனிதனின் எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும் உயரிய பணியையும் இலக்கியமே செவ்வனே செய்கிறது. எனவே மனித மனமும், மனிதரின் செயல்பாடுகளும் சந்திக்கும் இடமே இலக்கியம் எனத் தெளிவுபடுத்தலாம். இத்தகைய கருத்து, மனித வாழ்வின் சிறப்பியல்பாக உள்ள மொழியால் அமையும் காரணத்தாலும், வழிவழியாக விளங்கி நிலைத்த பயன் அளித்தலாலும் இலக்கியமே சிறந்தது எனச் சான்றோரால் சுட்டப்பெறும் (மு. வரதராசன், இலக்கியத்திறன், ப.44)

### பயன்

மனிதர் அறவழியில் நடந்து பெரும்புகழ் அடைய இலக்கியமே நெறிகாட்டுகிறது. தனிமனித ஒழுக்கம் முதல், ஒரு தலைவனுக்கு வேண்டிய தகுதி வரை அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக இலக்கியம் விளங்குகிறது. இதனை, இலக்கு என்பதற்குக் குறி எனப் பொருள் கொண்டு, குறிக்கோளாகிய அறத்தைச் சுட்டுவதே இலக்கியத்தின் பயன் எனச் சிறப்பித்தலைச் சான்றாகக் காட்டலாம் (அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை ப.5) இதனால் ஒரு சமுதாயத்தின் விருப்பு, நம்பிக்கை போன்ற பயன்பாட்டிலுள்ள கூறுகளைப் பண்பட்ட வடிவத்தில் அளிக்கும் பொறுப்பை இலக்கியமே ஏற்றுக் கொண்டிருப்பதையும் அறியலாம்.

### உ.வே. சாமிநாதையாரும் இலக்கியமும்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்துதான் பழந்தமிழ் நூல்கள் உரைகளுடன் பதிப்பிக்கப்பெற்றன. 1819-இல் எல்லிஸ் துரை திருக்குறளின் முதல் 3 அதிகாரங்களுக்கு எழுதிய உரையே தமிழில் முதன்முதலில் அச்சிடப்பட்டு, நூல் வடிவம் பெற்ற சிறப்படைகிறது. பின்னர், தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் பெரிதின் முயன்று தமிழ் இலக்கண, இலக்கியங்களை அடுத்தடுத்துப் பதிப்பித்தனர்.

இந்நூற்றாண்டில் பழைய உரைகளும் மூல நூல்களோடு இணைத்தே வெளியிடப்பட்டன. சிறந்த பதிப்பு நூல்களில், அந்நூலின் முன்னுரையிலும் பக்கங்களின் அடிக்குறிப்பிலும் பிற்சேர்க்கையிலும் உரைகளைப் பற்றிய ஆய்வு இடம் பெற்றது. ஏட்டுச்சுவடியில் இடம்பெற்றிருந்த நூல்கள் அச்சாகி வெளிவந்த பின் அவை மூலம், உரை, பதிப்பு, நுண்ணாய்வு போன்ற நெறிகளைத் திறம்படக் கொண்டிருந்தன.

உரையாசிரியர்களின் வரலாற்றைத் தெளிவுபடுத்தல், பாடவேறுபாடு காணுதல், பிழை போன்றவற்றைச் சுட்டல், உரைகளில் இடம்பெற்றுள்ள தவறுகளைக் குறிப்பிட்டுக் காட்டல், மறுப்புக்கு மறுப்புரை வரைதல், உரையின் உண்மைப் பொருளைத் தந்து உரிய விளக்கங்களை அளித்தல் முதலிய பல வடிவங்கள் உரையாசிரியர்களின் தனித்தன்மைகளாகின. அவ்வகையில் உ.வே.சாமிநாதையர் அரும்பாடுபட்டுத் தக்க சான்றுகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும், ஆய்வு நெறிகளையும் தம் உரைகளில் விளக்கிச் சென்றுள்ளார் எனலாம்.

'தமிழ் இலக்கியத்திற்கும் உ.வே.சா.வுக்கும் நெருங்கிய தொடர்பும் ஆழ்ந்த பயிற்சியும் உண்டு இதனை, தமிழுலகு முழுவதும் படித்து இன்புறும் விஷயங்கள் சிந்தாமணியில் இருக்க, ஒரு மதத்திற்கே உரியது; மற்றவர்கள் கண்ணில் படக்கூடாது என்று எண்ணி மூடி வைத்திருக்கும் இயல்பு. இப்படிச் சமய வேறுபாட்டால் மறைத்தன்மையால் உலகத்துக்கு வெளிப்படாத நூல்கள் எத்தனை இறந்து போயினவோ ! தமிழுக்குப் பெருமை உண்டாக்கப் பெரியவர்கள் நூல்கள் இயற்றி வைத்திருக்க, அவற்றை மறைத்துத் தமக்கும் தம்மைச் சார்ந்தவருக்கும் சிறுமை உண்டாக்கிக் கொள்ளும் இயல்பினர் மனம் திருந்தும் காலம் வருமா? என்று ஏங்கினேன்' என உ.வே.சா. எழுதியுள்ள வாழ்க்கைக் குறிப்பிலிருந்து அறியலாம் (என் சரித்திரம் ப.558) இதனால் தளர்ச்சியும் முதுமையும் தம் பணிக்குத் தடைகளாக விளங்கியிருந்த காலத்திலும், உ.வே.சா. தம் வாழ்வை இலக்கியத்தோடு இணைத்தே நடத்தி வந்துள்ள பாங்கு புலப்படுகிறது.

**குறைபாடு**

உ.வே.சா. எழுதிய, குறுந்தொகைப் பாடல் ஒன்றின் உரை பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகியது. உ.வே.சா.வை ஒத்த தமிழறிஞரே உ.வே.சா.வின் கருத்து நுட்பத்தில் ஐயம் எழுப்பி உ.வே.சா. உரையில் கண்டுள்ள தெளிவின்மையை உணர்த்தியுள்ளார்.

*முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்*
.................................................
.................................................
*நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே* (குறு. 167)

மேற்காணும் பாடலில் வரும் முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇ என்னும் தொடருக்கு உரைவிளக்கம் தரும் உ.வே.சா. முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையை, துவையாமல் உடுத்துக்கொண்ட தலைவியைக் காட்டுகிறார், (உ.வே.சா. குறுந்தொகை ப. 319)

மறைமலை அடிகளின் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, உ.வே.சா. தந்துள்ள விளக்கத்துக்கு மாறாகப் புதிய பொருத்தமான கருத்தைக் காட்டுகிறது வற்றக் காய்ச்சின கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலர் முகிழ்போற் சிவந்த மெல்லிய விரல்களால், நன்கு கழுவி வெண்மையான உயர்ந்த ஆடை, சமையல் செய்யும் விரைவினால் இடுப்பினின்றும் அவிழ்ந்து கழல அதனைக் கை கழுவாமலே உடுத்திக் கொண்டு என்பது மறைமலை அடிகளின் விளக்கமாகும் (முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை ப.10).

உ.வே.சா. தரும் உரையினும் மேம்பட்டதாகவும், பொருந்துவதாகவும் அமைவது மறைமலை அடிகளின் உரை எனப் புலப்படுகிறது. மறைமலை அடிகளின் கருத்தே பொருந்தி விளங்குவதை மு.வை. அரவிந்தனும் சுட்டுகிறார் (உரையாசிரியர்கள் ப.666).

உ.வே.சா. உடல் அயர்ச்சிக் காரணமாகவும், தம்வழி வந்தவர்கள் மேல் கொண்ட நம்பிக்கையின் விளைவாகவும் பொருந்தாக் கருத்தை மேலோட்டமாகச் சொல்லிச் சென்றுள்ளார் எனக் கொள்ள முடிகிறது. இவர் தாமாக முழுப்பொறுப்பையும் ஏற்று நன்றாக உழைத்து வந்தது சுமார் 1930 வரை என்றுதான் சொல்லுதல் வேண்டும். இதற்குப் பின் தளர்ச்சி மேலீட்டினால் ஐயர் தமது சிஷ்யர்களையே முற்றும் நம்பிவிட வேண்டியதாயிற்று. இதனால் முன் பதிப்பித்த நூல்களின் செம்மைப்பாடு பின்வந்தவற்றுள் இல்லை. இதற்கு உதாரணமாகக் குறுந்தொகைப் பதிப்பைக் கூறலாம். இதன்கண்ணே பாட நிச்சயத்திலும், பொருள்

உணர்ச்சியிலும் பிழைகள் பல உள்ளன என்பது தமிழறிஞர்கள் நன்கு உணர்ந்ததே என்னும் கருத்து இதனை உறுதிப்படுத்தும் (எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள், ப. 243) இருப்பினும் நூல்கள் பலவற்றை ஆராய்ந்து, அவற்றை அலசி நுட்பங்களை உணர்த்தியும் பெருமைபெற்ற உ.வே.சா. மிகக் குறைவான அளவிலேயே உரைப் பொருத்தமின்மையே வெளிக்காட்டியுள்ளார். இயன்றவரை மிகத் தெளிவான, சூழ்நிலைக்கேற்ற, உயரிய பொருண்மைகளைப் புலப்படுத்திய உ.வே.சா.வின் இலக்கியப் பங்களிப்பு அளப்பரியது எனலாம்.

மு. வரதராசனார் போன்ற அறிஞர்களும் உ.வே.சா.வின் கருத்தை அடியொற்றியே, திருமணம் செய்து இல்வாழ்க்கை தொடங்கிய ஒரு குடும்பத்தில் மனைவி தயிர்க்குழம்பு சமைத்தாள். முற்றிய தயிரைத் தன் மெல்லிய விரலால் பிசைந்தாள். சேர்ப்பன சேர்த்துத் தாளிக்கத் தொடங்கினாள். குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்கத் தவறினால் நறுமணமும் சுவையும் குன்றுமாதலின் தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த தன் ஆடையை உடுத்திக் கொண்டாள் எனக் காட்டுவர் (குறுந்தொகைச் செல்வம் ப. 50) தமிழறிஞர்களுக்குள்ளேயே பல கருத்து மாற்றங்கள் உ.வே.சா. உரை தொடர்பாக ஏற்பட்டிருப்பினும், உ.வே.சா.வின் ஓர் உரைத் தொடர் கூட ஆய்வுக்களம் அமைந்துள்ள திறன் போற்றத்தக்கது. எனினும் குறுந்தொகைக்கு முதல் உரை கண்ட தி. சௌரிப்பெருமாள் அரங்கனின் விளக்கத்தைப் பின்பற்றி, தம் கருத்தை உ.வே.சா. வெளியிட்டிருக்கலாம் என்றும் கருதலாம். இதற்குச் சான்றாக, கட்டித் தயிரைப் பிசைந்த விரலைக் கழுவாது தோய்ந்த ஆடையை உடுத்துக் கண்ணில் தாளிப்புப் புகை மணக்கத் துழாவிக் காய்ச்சிய புளிக்குழம்பை இன்சுவைத்து, கணவன் உண்ணுதலான், நுட்பமாய் மகிழ்ந்தது ஒள்ளிய நுதலினையுடைய மகளின் முகம் என்னும் தி. சௌரிப்பெருமாள் அரங்கனின் கூற்றைக் காட்டலாம் (குறுந்தொகை, ப. 195). இதனால் முதல் உரைக்காரரை மதித்துப் போற்றும் உ.வே.சா.வின் உயர் பண்பும் வெளிப்படுகிறது.

### குருதிப்பூ

குறுந்தொகைப் பாடல்களில் வரும் குருதிப்பூ என்னும் சொல்லுக்குக் குருதி போன்ற நிறத்தை உடைய பூ என உரை வகுத்துள்ளார் உ.வே.சா. காந்தள் மலர் குருதி போன்ற நிறங்கொண்டு இருக்கும் செய்தியை முல்லைப்பாட்டு 96 (தோடார் தோன்றி, குருதிபூப்ப), நற்றிணை

34:2-3, 399:2 (காந்தட் குருதியொண்பூ, குருதி யொப்பின் கமழ் பூங்காந்தள்), கைந்நிலை 26 (குருதி மலர்த்தோன்றி), குறுந்தொகை 239:3) (சிலம்புடன் கமழ் மலங்குகுலைக் காந்தள்), நற்றிணை 185:8, 313:6-7, 359:2 (அகலிகைக் காந்த ளலங்குகுலைப் பாய்ந்து, காந்தட் கமழ்குலை யவிழ்ந்த நயவருஞ் சாரல், அரங்குகுலைக் காந்தள்), கலித்தொகை 40:12 (எடுத்த நறவின் குலையலங் காந்தள்), அகநானூறு 108:15 (பஃறுடுப் பெடுத்த வழங்குகுலைக் காந்தள்), பெருங்கதை 2, 12:67-8 (பூந்தண் சாரற் பொங்குகுலை யெடுத்த, காந்தட் கொழுமுகை) போன்ற இலக்கியக் குறிப்புகள் கொண்டு விளக்கியுள்ளார் உ.வே.சா. (குறுந்தொகை ப.7 ) இதன் காரணமாகவே, எளிய பிரிவு மக்களுக்கும் புரியும் வகையில் தெளிந்த நடையில் மரபு மக்களுக்கும் புரியும் வகையில் தெளிந்த நடையில் மரபு மாறாது உரை வழங்கியவராக உ.வே.சா. பாராட்டப்படுகிறார் (தி. அரங்கநாதன், கா. வாசுதேவன், தமிழ் இலக்கிய வரலாறு – ஒரு புதுப்பார்வை, ப. 135)

**துறுகல்**

*மாசறக் கழீஇய யானை போலப்*
*பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்*
..............................................
..............................................
*பசலை யார்ந்தன குவளையங் கண்ணே* (குறு. 13)

இப்பாடலில் இடம்பெறும் துறுகல் என்னும் சொல்லுக்கு உருண்டைக்கல் எனப் பொருள் கொண்டு, தன் உடலில் உள்ள புழுதி முற்றிலும் நீங்கும்படிக் கழுவப்பட்ட யானையைப் போலத் துறுகல்லில் உள்ள மாசுகளும் நன்கு கழுவப்படல் வேண்டும் எனப் பொருள் தருகிறார் உ.வே.சா. (2000:33). பிணர் என்பது கல்லில் விளையும் நால்வகை ஊறுகளில் ஒன்று என்றும், இதனை வடமொழியில் ஜர்ஜ்ஜரா என வழங்குவர் என்றும், இதற்குத் தமிழில் சருச்சரை எனப் பெயர் என்றும், இக்காலத்தில் சருச்சரை என்பது சுரசுரப்பு எனப் பொருள் தரும் என்றும் பலவாறு விரித்துரைக்கிறார்.

மேலும் துறுகல், யானைக்கு உவமையாகக் காட்டப்படுவதைக் குறுந்தொகை 279:5-6 (சூழையிரும்படிக் கைகரந்தன்ன, கேழிருந் துறுகல்), குறுந்தொகை 111:4-5, 284:1-3 (பொருத யானைப் புகர்முகங்

கடுப்ப, மன்றத் துறுகன் மீமிசைப் பலவுடன், ஒண்செங்காந்த ளவிழு நாடன்), பட்டினப் பாலை 231-5 (யானை...தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு, வேறுபல் பூளையோ டுழிஞை சூடி), மலைபடுகடாம் 129-31இ 384; (காழ்மண் டெஃகங்களிற்று முகம் பாய்ந்தென, ஊழ்மல ரொழிமுகை யுயர்முகந் தோயத், துறுகல் சுற்றிய சோலை வாழை, களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகல்), அகநானூறு, 57:6-8 (குறுங்காலிற்றிப் புன்றலை நெடுவீழ், இரும்பிணர்த் துறுகற் றீண்டி வளிபொரப், பெருங்கை யானை நிவப்பற்றூங்கும்) போன்ற இலக்கியச் சான்றுகள்வழி ஆழ்ந்த புலமை நுட்பத்தைப் புலப்படுத்துகிறார். (குறுந்தொகை, ப.34).

ரா.இ.ராகவையங்காரின் குறுந்தொகை விளக்கம் துறுகல் என்பதற்கு மனைவியுள்ள மனைப்படைப்பையிற் சிறுபாறை எனப் பொருள் மட்டுமே தருகிறது (குறுந்தொகை, ப.49). முதல் உரையாசிரியரான தி.சௌரிப்பெருமாள் அரங்கன், நச்சினார்க்கினியர் உரையைப் பின்பற்றித் துறுகல் என்பதற்கு நெருங்கின மலை என உரை வகுத்துள்ளார் உ.வே.சா. (குறுந்தொகை, ப. 27) இவ்விருவரையும் விடப் பொருத்தமான பொருள் தரும் உ.வே.சா. தாம் ஆராய்வது ஒரு சொல்லாக இருப்பினும் அதன் ஆழமும், நுட்பமும் காட்டி உரைவளத்தில் மேம்பட்டு விளங்குகிறார்.

**கண் பசலை ஆர்தல்**

கண்கள் பசலைநிறம் பெறும் சூழலைச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் அறியலாம். மேற்காணும் குறுந்தொகைப் பாடலில் (எண் : 13) வரும் பசலை ஆர்ந்தன என்னும் தொடருக்கு இப்பொழுது குவளை மலர் போன்ற கண்கள் பசலை நிரம்பப் பெற்றன என உரை எழுதியுள்ளார் உ.வே.சா. (குறுந்தொகை, ப. 33). பசலை ஆர்த்தல் என்னும் நிகழ்வுக்குப் பின்வரும் இலக்கியச் சான்றுகளை மேற்கோளாகத் தந்துள்ளார் அவை :

*காமங் கொல்லிவள் கண் பசந்ததுவே (நற்றிணை, 35:12)*
*நெய்த லுண்கண் பைதல் கூர (நற்றிணை, 113:7)*
*கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும்*
*பழநல மிழந்து பசலை பாய (நற்றிணை, 219:12)*
*பூப்போல வுண்கண் பொன்போர்த் தனவே (ஐங்குறுநூறு, 16:4)*
*உண்கண் பசப்ப தெவன்கொ லன்னாய் (ஐங்குறுநூறு 21:4)*
*ஏதி லாளர்க்குப் பசந்தவென் கண்ணே (ஐங்குறுநூறு 34:4)*

*கயலெனக் கருதிய வுண்கண்*

*பயலைக் கொல்கா வாகுதல் பெறிகே* (ஐங்குறுநூறு 36:45)

*நயந்தோ ருண்கண் பயந்துபனி மல்க* (ஐங்குருநூறு 37:2)

*பசப்பணிந்தனவால் மகிழ்நவென் கண்ணே* (ஐங்குருநூறு 45:4)

*என்செயப் பசக்குந் தோழியென் கண்ணே* (ஐங்குருநூறு 169:5)

*பல்லித ழுண்கண் பய்த்தன்மற் றெவனோ* (ஐங்குருநூறு 170:4)

*பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே* (ஐங்குருநூறு 264:4)

*பனிமலர் நெடுங்கண் பசலை பாய* (ஐங்குருநூறு 477:1)

*கொன்றைப் பூவிற் பசந்த வுண்கண்* (ஐங்குருநூறு 500:1)

*பல்லிதழ் மலருண்கண் பசப்ப* (கலித்தொகை 45:11)

*பொன்னெனப் பய்ந்தகண் போதெழி* (கலித்தொகை 77:12)

*னலஞ்செல*

*கண்பசந்து* (அகநானூறு 146:11)

*முயக்கிடைத் தண்வளி போழப் பயப்புற்ற* (திருக்குறள் 1239)

*பேதை பெருமழைக் கண்* (திருக்குறள் 1240)

*கண்ணிப் பசப்போ* (சீவகசிந்தாமணி 231)

இவை தவிர, பசலை நோய் பற்றிய இலக்கிய மேற்கோளைத் தம் குறுந்தொகை உரையின் பல்வேறு பாடல்களுக்கு விளக்கம் தருகையில் காட்டுகிறார் உ.வே.சா. ஒரு மிக எளிய சொல்லாக இருப்பினும், அதன் சுவையும் நயமும் கருதித் தவறாது அவ்வகைச் சொற்கள் ஆட்சி பெற்றிருக்கும் இலக்கியங்களைச் சுட்டும் இயல்பு கொண்டவராகவும் இவர் விளங்குகிறார்.

**கருங்கால் வேங்கை**

*கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்*

*இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை*

.....................................................

.....................................................

*நல்லை யல்லை நெடுவெண் ணிலவே* (குறு. 47)

கருங்கால் வேங்கை என்னும் இப்பாடலின் முதல் தொடரை மனத்திற்கொண்டு பல்வேறு இலக்கியங்களிலிருந்து காட்டுகளைச் சுட்டியுள்ளார் உ.வே.சா. குறுந்தொகை 26:1, மதுரைக் காஞ்சி 296, நற்றிணை 217:4, 222:1, 313:1, 351:5-6, 368:2, 383:1, அகநானூறு 345:8, 349:10, புறநானூறு 137:9 ஆகிய இலக்கியச் சான்றுகளைக் குறிப்பிடும் உ.வே.சா. அவ்வவ் இலக்கியங்களில் இடம்பெறும் வரிகளைச் சுட்டாமல், பாடல் எண்களை மட்டும் தந்துள்ளார். ஆனால் வேங்கைமலர் கல்லின்மேல் விழும் காட்சியை நற்றிணை 257:5-6 (அரும்பு வாயவிழ்ந்த கருங்கால் வேங்கைப், பொன்மரு ணறுவீ கன்மிசைத் தா அம்), ஐங்குருநூறு 219:1-2 (கருங்கால் வேங்கை மாத்கட் டொள்வீ, இருங்கல் வியலறை வரிப்பத் தாஅம்), அகநானூறு 232:7-9 (மன்ற வேங்கை மணநாட் பூத்த, மணியே ரரும்பின் பொன்வீ தாஅய், வியலறை வரிக்கு முன்றில்) போன்ற அடிகளைக் கொண்டு தெளிவாக்கியுள்ளார் (குறுந்தொகை ப.105). இதனால் தேவையான இடங்களில் குறிப்பாகவும், ஆழம் உணர்த்த வேண்டிய இடங்களில் நுணுக்கமாகவும் உ.வே.சா. உரை கண்டுள்ளார் எனலாம்.

ஒரு மிகச்சிறந்த ஆராய்ச்சியாளர் என்பவர் தம் வாழ்வை இலக்கியத்திற்கே செலவிட்டவராகவும், அவ்விலக்கியங்களின் நுட்பங்களை அரிதின் முயன்று வெளிக்காட்டியவராகவும் குறிக்கப்படுவார். இதனை, அறிஞர் பலர் தலைமுறை தலைமுறையாக உயர்ந்த நூலுக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்வதால்தான், தம் பெருமையை எல்லாம் சுருக்கிக் கொண்டு நூலின் பெருமை ஒன்றையே விளங்க வைப்பதால்தான், சங்கப் பலகையில் தம் இடம் எல்லாம் விட்டு உயர்ந்த நூல் மட்டும் விளங்கச் செய்வதால்தான், அத்தகைய நூல் அழியா வாழ்வு பெறுகின்றது. உலகத்தில் இன்று உள்ள உயர்ந்த நூல் எல்லாம் இவ்வாறு எத்தனையோ அறிஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவர்களுடைய வாழ்வை எல்லாம் தம் புகழில் கலந்து மூழ்கிவிடச் செய்திருக்கின்றன என்னும் சான்று உறுதிப்படுத்தும் (மு. வரதராசன், குறுந்தொகைச் செல்வம், பக். 44-45) உ.வே.சா.வின் தியாக வாழ்வும், அறிவு நுட்பமும் மேற்காணும் கூற்றை மெய்ப்பிக்கின்றன.

# தமிழ் உரைநடையில் தடம் பதித்தோர் ராவ்சாகேப் மு. இராகவையங்கார்

## (மு. இராகவையங்கார் நினைவாக)

முனைவர் இ.கி. இராமசாமி
தமிழ்ப்பேராசிரியர்

1.1. ராவ்சாகேப் மு.இராகவையங்கார் 26.7.1978 இல் பிறந்து தமது 82 ஆம் அகவையில் 2-2-1960 இல் மறைந்தார். மதுரையில் பாண்டித்துரைத்தேவர் தோற்றுவித்த தமிழ்ச் சங்கத்தையும் செந்தமிழ் இதழையும் மு. இரா.வையும் இணைத்தே பார்க்கவேண்டும். இலக்கியப் பணி, இலக்கணப்பணி, பதிப்புப்பணி, இதழ்ப்பணி, ஏடு தொகுத்தல், தமிழ்ப் பேரகராதியைத் தலைமைதாங்கி உருவாக்கல் மற்றும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நிலைகளில் உயர்ந்து நிற்பவர் மு.இரா.

1.2. தமிழ் இலக்கிய நயங்களை விளக்கிக் கட்டுரைகள் எழுதப்பட்டுவந்த நாட்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை விவாதநெறியில் எழுதிய முன்னோடி மு.இரா. செந்தமிழ் இதழில் ஆராய்ச்சி என்ற தனிப் பகுதியை ஒதுக்கித் தமிழ் ஆராய்ச்சிக்குக் களமும் தளமும் அமைத்துக் கொடுத்தவர். அவருடைய காலத்தில் வழக்காடுவது (Argument) போலக் கட்டுரைகள் எழுதும் போக்கு இருந்தது. ஆனால் மு. இராவின் உரைநடை தெளிநடை ஆகும். அது விவாதப்போக்கில் (debate) அமைந்தது. யாரையும் பெயரைச் சொல்லி இழிவுபடுத்தாத நடை, தமிழ் சமஸ்கிருதம் விரவிய கலப்புநடை, சிலவேளை இருமொழியிலும் புலமை பெற்றவருக்கே புரியும்படியான நடை

சான்றாக : *'நலந்திகழ் நாராயண தாசர்'*
*ஸ்ரீ வால்மீகி முனிவரும் தென்னாடும்'*

1.3. கட்டுரைகள் தோறும் இறுதிப்பகுதிகளில் முடிவுகள் (Findings) கூறும் முறை இவர்பால் உண்டு. இன்றைய ஆய்வியல்

நெறிமுறைகள் (Research methodology) தமிழில் கால்கொள்வதற்கு முன்பே முடிவுகூறும் முறையினை அறிமுகம் செய்தவர் மு.இரா.

1.4. இராமாயணமும் தமிழ் வழக்குகளும், கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குகள் போன்ற கட்டுரைகள் மு. இராவின் ஒப்பிலக்கிய ஆராய்ச்சிகளாகும். அவரை ஒப்பிலக்கிய ஆராய்ச்சியின் முன்னோடியாகக் கொள்ளலாம்.

1.5. அவர் எழுதிய 'வேளிர் வரலாறு' , 'சேரன் செங்குட்டுவன்',' ஆழ்வார்கள் காலநிலை' , 'சாசனத் தமிழ்க்கவி சரிதம்' ஆகியன அவர் சிறந்த வரலாற்று ஆசிரியர் என்பதைக் காட்டும்.

1.6. பண்டைக் கைத்தொழில் வியாபாரம்' என்ற கட்டுரை அவரை ஒரு பொருளாதார வல்லுநராகக் காட்டும்.

1.7. அவர் செந்தமிழ் இதழின் ஆசிரியப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் எழுதிய நூல் மதிப்புரைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. பாரதியாரின் சுதேசி கீதங்களுக்கு அவர் எழுதிய மதிப்புரை புதுமையில் அவருக்கிருந்த நாட்டத்தைக் காட்டுகிறது. விடுதலைப் போரின் பின்புலத்தைச் சுட்டுகிறது பாரதியாருக்கு முன்பு தேசாபிமானத்தை உண்டாக்கவல்ல உயர்கவிகள் கிடைத்திலர்.

நம் தமிழ்மொழியில் ஈசுவர சம்பந்தமான பாடல்களும் காவியங்களும் புராணங்களும் பிறவும் நிரம்பவுண்டாயினும் நம்மவர்க்குத் தற்காலம் இன்றியமையாதது வேண்டத்தக்கனவும் தேசாபிமானத்தை உண்டாக்கவல்லனவாகவும் உயர்கவிகள் கிடைத்தில.

எனவரும் மதிப்புரைகளில் அவருடைய நாட்டுப்பற்றும் அவருக்கிருந்த புதுமையின் நாட்டமும் ஒளிர்கின்றன.

1.8. அதேசமயம் பழமையை மறப்பதால் வரும் கேட்டினை வீரத்தாய்மார் கட்டுரையில் உணர்த்துகிறார். மறக்குடிமகளிரின் வீரச்

செயல்களை அடுக்கிச் சொல்லிவந்த மு. இராவுக்கு இன்றைய தமிழர் நிலை கவலை அளிக்கின்றது.

ஆண்மையும் தியாகமுமாகிய பயிற்சிகள் குறைய, தமிழர் வீரம் முற்றும் தலை கவிழ்ந்தது. இக்காலத்தவராகிய நமக்கோ, மேலே கூறிவந்த அற்புத வீரச் செயல்களெல்லாம் வெறுங் கற்பனைக் கதைகளாகவே தோன்றும் என்பது திண்ணம். ஏனெனில் நம்மவரது மனநிலை அவ்வளவுக்குக் குன்றியொழிந்தது. காலச் சக்கரத்தின் சுழற்சியால் உலகத்தில் ஓரிடத்திற்குள்ளே உண்டாகும் அற்புத மாறுதல்கள் இவை.

1.9. மு.இரா. புராண இதிகாசங்களை ஆராய்ச்சி செய்யுங்கால் அவற்றின் நிகழ்ச்சிகளை நியாயப்படுத்திப் பக்திநெறியிலும் வைதீக நெறியிலும் முடிவுரைத்துள்ளார்.

சான்றாக : மகாபலி மூவுலகங்களையும் வென்று ஆண்டு வந்த காலத்தே அவன் இழைத்து வந்த துன்பத்துக்கு ஆற்றாத தேவர்களின் வேண்டுகோட்படி, திருமால் வாமன உருவோடும் அவ்வசுரவேந்தன் புரிந்த வேள்வியுட் புகுந்து அவனை மூவடிமண் வேண்டிப் பெற்றதும், பெற்றதனை அளவிடும்போது நெடியோனாய் வளர்ந்து மூவுலகும் ஈரடியால் அளந்து அவற்றைத் தனதாக்கிக் கொண்டதும், அவ்வசுரனது நற்செயல்கள் காரணமாக அவனைக் கொல்லாமல் பாதலத்து வீழ்த்தியதும் புராண வரலாறுகளாகும் (கட்டுரை மணிகள் ப. 26)

வள்ளுவனார், பிரமதேவரது திரிவர்க்க நூலைச் சுருக்கி முப்பால் என்ற பெயரால் தம் அரிய பெரிய நூலைத் தமிழுலகுக்கு அருளிய சிறப்புப் பற்றியே, முன்னோர் நான்முகன் அவதாரமான திருவள்ளுவர் என்று கூறலாயினர் என்று கொள்ளுதல் பெரிதும் பொருந்துவதாதல் காண்க. (ஆராய்ச்சித் தொகுதி – ப. 206)

# பெருந்தேவனாரின் கவிநயமும், கலைநயமும்

திரு. த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்.ஃபில்.

நற்றிணைத் தொகுப்பில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடலை மட்டும் முதன்மைச் சான்றாதாரமாக இக்கட்டுரை கொண்டுள்ளது.

எந்தவொரு காரியத்தையும் தொடங்கும்போது கடவுளை வணங்கித் தொடங்குவது தமிழ்ச் சான்றோர்களது மரபு. பாரதம் பாடிய பெருந்தேவனார் நற்றிணைத் தொகுப்புக்குக் கடவுள் வாழ்த்து பாடியிருப்பது சிறப்பானதாகும். எல்லாம் வல்ல இறைவன் உருவமில்லாதவன் என்பதை இப்பாடல் குறித்து நிற்கின்றது. இயற்கையே தெய்வம் என்பதை இப்பாடல் வாயிலாக விளக்குகின்றார் தேவனார். பஞ்ச பூதங்களை நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று வகைப்படுத்துவர். பெரியோர் பரந்துபட்ட உலகுக்கும் சரி, நம் உடலுக்கும் சரி பஞ்ச பூதங்களே ஆதாரமாகும். பெருந்தேவனார் காக்கும் கடவுளாகிய நெடிய திருமாலை முன்னிறுத்தி இயற்கையாகத் தோன்றி விளங்கும் கடலுக்கும், ஆகாயத்திற்கும், திசைகளுக்கும் ஒப்புமைப்படுத்தி நிலவையும் கதிரவனையும் தன் இரு கண்களாகக் கொண்டுள்ளான் என்று சொல்லியிருப்பது அவரது கற்பனைத் திறனைக் காட்டுகின்றது. சூரியனும், நிலவும் தலைகாட்டாவிட்டால் இவ்வுலகம் இயங்காது என்பது அறிவியல் உண்மையும் கூட.

*மா நிலம் சேவடி ஆக தூ நீர்*
*வளை நரல் பௌவம் உடுக்கை ஆக*
*விசும்பு மெய் ஆக திசை கை ஆக*
*பசுங் கதிர் மதியமொடு சுடர் கண் ஆக*
*இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய*
*வேத முதல்வன் என்ப*
*தீது அற விளங்கிய திகிரியோனே* (நற். கடவுள் வாழ்த்து)

உலகினிடத்தே உளதான தீயவை அனைத்தும் முற்றவும் விலகிப் போகுமாறு செய்தலினாலே, இவ்வுலகினைக் காத்தற்கு உரியோன் என்னும் புகழோடு விளக்கம் பெற்றவன்; சக்கரப் படையினைத் தரித்தவன் ஆகிய திருமால் உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களிடத்தும் மேவியிருப்பதோடு அவற்றைத் தன் உறுப்புகளாகக் கொண்டு விளங்கும் இறைவன் பெருமை பொருந்திய உலகத்தைத் தன் சேவடியாகக் கொண்டுள்ளான். தூவுகின்ற அலை நீரையுடைய, சங்கு ஒலிக்கும் கடலைத் தன் ஆடையாகக் கொண்டுள்ளான். நீல வண்ணமாகக் காட்சி தரும் விசும்பைத் தன் உடலாகக் கொண்டுள்ளான். நான்கு பெருந்திசைகளையுமே தன் நான்கு கைகளாகக் கொண்டுள்ளான். பசுமையான கதிர்களையுடைய நிலவையும் கதிர்களை வீசும் ஞாயிற்றையும் தன் இரு கண்களாகக் கொண்டுள்ளான். அவன் வேதங்களாலும் புகழப்படும் முதல்வன். அவனைக் குற்றமற விளங்கிய, ஆழியுடைய, முறை செய்து காப்பாற்றும் இறை என்று சொல்லுவர் சான்றோர்.

தொல்காப்பியர் திருமாலை முல்லை நிலத்திற்குரிய தெய்வமாகக் காட்டுகின்றார். மாயோன் மேய காடுறை உலகமும் 1 பரிபாடலில் கடுவன் எயின்னார் திருமாலைப் பற்றி பாடும் போது திருமால் நீலமணி போன்ற நிறத்தையுடையவன், நெடிதான திருவடியை உடையவன். தீ, காற்று, வான், நிலம், நீர் ஆகிய ஐம்பெரும் பூதங்களும் திங்களும் வேள்வித்தலைவனும், செவ்வாய் முதலிய கோள்கள் ஐந்தும், அசுரரும், பன்னிரு ஆதித்தரும், அச்சுவினி தேவரும், இமயனும், கூற்றுவனும் மூவேழ் உலகும் உயிரினங்களும் ஆகியவை திருமாலிடம் இருந்து தோன்றியதாக வேதங்கள் கூறுகின்றன. அதனால் யாமும் கூறுவோம் என்கிறார்.

*தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்*
*ஞாயிறுந் திங்களு மறனு மைவரும்* [2]

எனவே காக்கும் தெய்வமான திருமாலைப் போற்றி திருமாலை தனது கடவுள் வாழ்த்துப் பாடலில் பாடியிருக்கின்றார் பெருந்தேவனார் எனலாம்.

கடவுள் வாழ்த்து எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆழி சூழ் உலகைத் தன் சிவந்த அடிகளாகவும், மாபெரும் நீர்ப்பரப்பைக் கொண்ட கடலைத் தன்னுடைய ஆடையாகவும், எல்லை காண இயலாத ஆகாயத்தைத் தன்னுடைய மெய்யாகவும், நான்கு திசைகளைத் தன் கைகளாகவும், சந்திர, சூரியர்களைத் தன்னுடைய கண்களாகவும் திருமால் கொண்டுள்ளதாகப் படைத்துள்ளார். இதன் மூலம் இறைவன் எங்கும் எதிலும் நீக்கமுற நிறைந்திருப்பவன் என்ற கருத்தினை நமக்கு உரைக்கின்றார். நிலத்திலும் உயிர்கள் வாழ்கின்றன; நீர் சூழ்ந்த கடலிலும் உயிர்கள் வாழ்கின்றன. எனவே, உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் தன்னகத்தே கொண்டு காப்பவனாக விளங்குபவன் திருமால் என்கிறார். இயற்கை என்றும் நிலைத்திருப்பது. எனவே இறைவனும் இயற்கையின் வடிவமாக நம்மையெல்லாம் காத்துக்கொண்டிருப்பதுடன், நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்; நம்முடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார் என்பது பொருளாகும்.

---

அருஞ்சொற்பொருள் : தூநீர் = அலையாலே தூவப்படுகின்ற நீர், தூய்மையான நீர்

மா = பெருமை, வளை = சங்கு (நரல்)
நாலுதல் = ஒலித்தல் சுடர் = ஞாயிறு
திகிரி = சக்கராயுதம், பௌவம் = கடல்

---

சான்றெண் விளக்கம்

1. (தொல் பொ. 951-1)
2. பரிபாடல் 3 (4-5)

# பாஸ்கர சேதுபதியின் பாதை

திரு. இரா. இராஜமோகன்
முனைவர் பட்ட ஆய்வாளர்

பாஸ்கர சேதுபதி மன்னர் இராமநாதபுரம் சமஸ்தான ஆட்சியை சுமார் ஆறு ஆண்டுகாலம் ஏற்று இருந்தார். இந்தியாவில் அந்தக் கால கட்டத்தில் வேறு எந்த சமஸ்தானத்திலும் இருபத்தொன்று வயதில் சமஸ்தானாதிபதியாக இருந்தது இல்லை என்றாலும் பாஸ்கர சேதுபதி தனியரசர்களாகவும், தன்னேரிலாத ஆட்சியாளர்களாகவும் விளங்கிய தமது முன்னோர்களது ஆட்சித் திறனையெல்லாம் நன்கு அறிந்தவராக இருந்ததால் சமஸ்தானத்தின் செம்மையான நிர்வாகத்திற்குரிய செயல்களில் ஈடுபட்டார். இரண்டாயிரத்து நூற்று எழுபது கிராமங்கலிருந்து ஆண்டு வருமானமாக சுமார் எட்டு லட்சம் ரூபாய் வருவாயையும் கொண்டுள்ள அப்போதைய இராமநாதபுரம் சமஸ்தானத்தின் காலங்கடந்த பல தேவைகளை உடனடியாக நிறைவேற்ற முயன்றாரென்பது குறிப்பிடத்தக்கது.

**பாஸ்கரரின் கல்வித்திறம் :**

ஆங்கில மொழியை, எழுத்திலும் பேச்சிலும் இனிமையும், அருமையும் அமையக் கையாளும் திறனும், யாவரிடமும் அன்பாகக் கலந்து உரையாடும் தேர்ச்சியும் பெற்றிருந்த மன்னரிடத்தில், கவர்னர், கலெக்டர் முதலிய அதிகாரிகளும், ஜமீன்தார்களும், சமஸ்தானாதிபதிகளும், கனிவும், மதிப்பும் கொண்டு பழகி வந்தனர். இந்திய அரசு அவருக்கு மகாராஜா என்ற சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தது. பாஸ்கர சேதுபதி மன்னருக்கு முன்னூறு ஆண்டுகள் வரை இராமநாதபுரம் சீமையை ஆண்டுவந்த சேதுபதி மன்னர்கள் திருமலை ரகுநாத சேதுபதி முதல் முதலாவது முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி மன்னர் வரை எந்த அரசுக்கும் கட்டுப்படாது கப்பம் செலுத்தாத தன்னாட்சி மன்னர்களாக வந்தனர். அதனால் அந்தத் தொன்மையான சேதுபதி மன்னர் பரம்பரையின் பிரதிநிதியாகத் தாமும் இருக்க வேண்டுமென்று விரும்பினார்.

**பாஸ்கர சேதுபதியின் இலக்கு :**

பாஸ்கர சேதுபதி அவர்கள் தமது இருபத்து ஐந்தாவது வயதில் அவர் வரைந்துள்ள நாட்குறிப்பில் கீழ்காணும் பேருண்மைகள் புலப்படுகின்றன. 1883-வது ஆண்டு ஜனவரித் திங்கள் பதிமூன்றாவது நாள் பொங்கல் திருநாளில், தமிழக மக்கள் பூரித்து மகிழ்வது வழக்கம். ஆனால் பாஸ்கர சேதுபதி மன்னரைப் பொறுத்தவரை அவரது சிந்தனை பொங்கலுக்கும் மேலாகப் பொங்கி வழிந்தது என்பதை அவரது அன்றைய நாட்குறிப்பில் பதிவுகள் சொல்லுகின்றன. தமது எஞ்சிய வாழ்நாளில் குறைந்தது முப்பத்து மூன்று சாதனைகளையாவது செய்து முடிக்க இறைவனிடம் அன்று வேண்டிக்கொண்டார். அவையாவன !

- தமிழின் வளர்ச்சிக்காகத் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவுதல்.
- குறைந்தது பன்னிரண்டு தமிழ் நூல்களையும், பன்னிரண்டு வடமொழி நூல்களையும் ஏட்டுச்சுவடிகளில் இருந்து அச்சேற்றி வெளியிடுதல்.
- மேற்படிப்பிற்குச் செல்லும் தீண்டத்தகாத மாணவர்களுக்குச் சென்னை, மதுரை ஆகிய பெருநகர்களில் தங்கும் விடுதிகளை அமைத்தல்.
- தம்மைப் பெற்றுவளர்த்த அன்புத்தாயாருக்கு இறுதிச் சடங்குகள் செய்யும் வாய்ப்பைப் பெறுதல்.
- இராமேஸ்வரம் திருக்கோயில் திருப்பணி செய்தல்.
- இராமேஸ்வரம் திருக்கோயில் நிர்வாகத்தை பண்டாரத்திடமிருந்து ஏற்று செம்மையாக நிர்வகித்தல்.
- மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திருப்பணி செய்தல்.
- இலண்டன் மாநகரம் சென்று இராணி விக்டோரியாவைச் சந்தித்தல்.
- பிரிட்டிஷ் அரசிடமிருந்து உயர்ந்த விருதுகளைப் பெறுதல்.
- தமது அன்பிற்கும், மதிப்பிற்கும் உகந்த அண்ணன் பாண்டித்துரைத் தேவருக்கு முன்னால் இறந்துவிடும் வாய்ப்பைப் பெறுதல்.

இன்னும் இவை போன்ற பல ஆசைகள் அவரது வாழ்வில் எய்த வேண்டிய இலக்குகளாகும். சமயத்திலும், மொழியிலும் தோய்ந்து நின்ற ஈடுபாடும், அன்னையிடத்திலும், அண்ணனிடத்திலும் கொண்டிருந்த அன்பும் ஆகிய எளிய மக்களிடம் ஈடுபட்ட உயர்ந்த உள்ளமும் அவரது இலக்குகளாக நாட்குறிப்புப் பதிவுகள் அமைந்துள்ளன.

**பாஸ்கரரின் கொடைப்பண்பு :**

தம்மை நாடி வருகின்ற நாவலர்கள், நல்லிசைப் புலவர்கள், கலைஞர்கள், வறுமையையும், சிறுமையையும் வாழ்க்கைச் சுமையாகக் கொண்ட பலதிறப்பட்ட மக்கள் ஆகிய அனைவரையும் காலமெல்லாம் தாங்கும் ஆலமரமாகவே அவர் காட்சி அளித்தார். நொந்து வந்தவர் யாராக இருந்தாலும் அவரது சிந்தை குளிர தமது செழுங்கரங்களால் பொன்னையும், பொருளையும் அள்ளி அள்ளி வழங்கி அகம் மகிழ்ந்தார். ஏழைகள் திருமணம், கல்விக்கூடம், கலாசாலை, மாணவர் விடுதி, மேல்படிப்பு வசதி, பத்திரிகை, கோயில் கட்டளை, திருப்பணி, திருவிழா போன்ற அறப்பணிகளுக்கான கோரிக்கைகள் எத்தனை வந்தாலும் அவை அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு மன்னரது நெகிழ்ந்த மனமும், நிறைந்த கரங்களும் துணை நின்றன.

இவை போன்று தேசிய காங்கிரசுக்கு ரூபாய் பதினாறாயிரமும், சென்னை கிறித்தவக் கல்லூரியில் மாணவர் விடுதியும், உயர்நிலைப் பள்ளியும் அமைக்க ரூபாய் நாற்பது ஆயிரமும், இராமநாதபுரத்தில் தீண்டப்படாதோர் குழந்தைகளின் கல்விக்கு ரூபாய் பதினாறாயிரமும், மதுரை அமெரிக்க மிஷன் மருத்துவமனைக்கு ரூபாய் ஆறாயிரமும், மதுரை யூனியன் கிளை நூலகக் கட்டிட அமைப்பிற்கு ரூபாய் ஐயாயிரமும், மதுரை உயர்நிலைப் பள்ளிக்கு ரூபாய் மூவாயிரமும் என்று சேதுபதி மன்னரது நன்கொடைப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

பாஸ்கரரின் நட்புத்திறம் :

ஒருநாள் காலை இராமந்திர மாளிகை முகப்பில் உள்ள பூந்தோட்டத்தில் மன்னர் உலாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவருடன் வந்து கொண்டிருந்த காதர் இராவுத்தரது இதயத்தில் ஏதோ ஒன்று அழுத்திக்கொண்டிருப்பதை மன்னரது அகக்கண்கள் உணர்ந்து விட்டன. (காதர் இராவுத்தர் என்பவர் மன்னருக்கு ஊழியம் செய்தவர்)

*காதர் ! ஊருக்குப் போக வேண்டுமா?*
*அதெல்லாம் ஒன்றுமில்லை மகாராஜா*
*(ஏன் இன்னும் மறைக்கிறாய்*
*மன்னரது குரலில் அழுத்தம் தொனித்தது)*

மகாராஜா ! பல வருடங்களாக எனக்கு ஒரு ஆசை, நாகூர் ஆண்டவர் பள்ளிவாசலுக்குப் போய் வரவேண்டும் என்று, அங்கு இன்னும் பத்து நாட்களில் கந்தூரி விழா நடக்கவிருக்கின்றது என்று தயக்கமாக காதர் பதிலளித்தார்.

*நாகூர் போய்வர என்ன செலவாகும்*
*நூறு ரூபாய் தேவைப்படும்*
*அவ்வளவுதானா ! குடும்பத்துடன் போய் காணிக்கையெல்லாம் செலுத்த நூறு ரூபாய் போதுமா?*
*மகாராஜா ! அதுபோதும் !*

மன்னர் அறைக்குள் சென்று சில நொடிகளில் திரும்பி வந்தார். நூல் கயிற்றுப் பைகள் நான்கினை காதரிடம் கொடுத்தார்.

இந்தா ! இதில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. நாகூர் சென்று ஆறுதலாகத் திரும்பிவா. உக்கிரான சாவியை அடைப்பம் சூரியன் சேர்வையிடம் கொடுத்துவிட்டுப் போ.

*மகாராஜா இவ்வளவு பணம் எதற்கு !*
*பரவாயில்லை ! நிம்மதியாகப் போய்வா !*

காதர் இராவுத்தருக்கு ஏற்பட்ட திகைப்பில் அவரிடம் இருந்து மேலும் வார்த்தை எதுவும் வரவில்லை.

பாஸ்கர சேதுபதி தமது அன்பிற்கும் அனுதாபத்திற்கும் உரியவர்களை எவ்விதம் ஆதரித்து மகிழ்ந்தார் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாகும். இவ்வன்பும், பாசமும், அவரது பணியாளரிடமித்து மட்டுமல்லாமல், அவரைச் சந்திக்கின்ற புலவர், கலைஞர்களிடத்திலும் காட்டாறாகப் பொங்கி வழிந்தது.

**தமிழ்ச்சங்கத்திற்குக் கொடுத்த கொடைத்திறம் :**

18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு நாள் பாண்டித்துரைத் தேவரவர்கள் மதுரையில் இருந்த பொழுது, திருக்குறள் ஒன்று பற்றிய சரியான விளக்கம் பெற திருக்குறள் நூலைப் பார்க்க விரும்பினார். மதுரை நகரில் பலரிடம் கேட்டுப் பார்த்ததில் திருக்குறள் நூல் கிடைக்கவில்லை. தேவரவர்கள் மிகுந்த மன வேதனையுற்றார்கள். கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தமிழாய்ந்த நான்மாடக் கூடலில் நாளும் தமிழ் மறையாகப் போற்றப்படும் திருக்குறள் இல்லையென்றால் பிற நூல்களைப் பற்றி எப்படி எண்ணிப் பார்ப்பது? இயலாத ஒன்று!

இவ்வாறு தேவர் அவர்களின் சிந்தனை அமைதியற்றுச் சிறகடித்தது. ஏற்கனவே அவர் இராமநாதபுரத்தில் நிறுவியிருந்த தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்பினை மதுரையிலும் நிறுவி மாண்புற தமிழைத் தழைக்கச் செய்தல் வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். இதனை அறிந்த பாஸ்கரர் தமது விருப்பமும் அதுவெனக் கூறி ஆதரவு நல்கினார். அதன்படி மதுரை மாநகரில் 14-09-1901இல் நான்காம் தமிழ்ச்சங்கம் தொடங்கப்பெற்றது. மன்னர் பாஸ்கர சேதுபதி ஏற்கனவே நிறுவிய சேதுபதி உயர்நிலைப் பள்ளி அரங்கில் தமிழ் இலக்கியச் சுவடிகளைத் தேடித் திரட்டிப் பாதுகாப்புச் செய்யவும், அவைகளை அதன் மூலம் தமிழை வளர்க்க ஆவண செய்வதற்கும், இந்த அமைப்பு செயல்பட பாஸ்கர சேதுபதி மன்னர் பல்லாற்றாலும் உதவி வழங்கினார்.

செந்தமிழ்ச் செல்விக்கு எடுக்கப்பட்ட இந்தச் சீர்மிகுந்த தமிழ் விழா, திருவிழா பயனும் பொலிவும் பெற சிவகங்கை, புதுகை, தஞ்சை அரசப் பிரதிநிதிகள் கலந்த கொண்டபோதினும் பாஸ்கர சேதுபதி மன்னர் அவர்கள் தமது பரிவாரம் சூழ முன்னதாகவே மதுரைக்கு வந்திருந்து விழா நிகழ்ச்சிகள் அனைத்திலும் நேரில் பங்குகொண்டு சிறப்பித்தார். அந்த நிகழ்ச்சியின் பொழுதே, சங்கம் சிறப்புற ரூபாய் பத்தாயிரம் வழங்கினார்.

இந்த இணையற்ற விழாவில் கலந்துகொண்டு மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த புலவர் பெருமக்களில் சிறந்த நாகூர் குலாம் காதிறு நாவலர் அவர்கள், சங்க இலக்கியத்தை நினைவூட்டும் வண்ணம் இந்த விழா நிகழ்ச்சியினை ஆற்றுப்படை இலக்கியமாகப் படைத்தார். இந்த

நூலில், மதுரைச் சங்க அமைப்பிற்கு பாஸ்கர சேதுபதி மன்னர்,

*இரவலர்க்கு அடையா வாயிற் புரவலன்*
*சேதுபதி யொருக்கும் பாஸ்கர சேதுபதி*
*அருளொடு நிலைகுயர் பொருள் நனி உதவி......*

என மன்னரது உதவியைப் பொருள் நனி உதவி என்னும் பொருளில் புலவர் பாடியுள்ளார். அவர் பயன்படுத்தியுள்ள நனி என்ற தமிழ் வழக்கிற்கு வரம்பு இல்லாதது என்ற பொருள். பாஸ்கர சேதுபதி மன்னரது தமிழ்ப் பணிக்கான தாளாத கொடைக்கும் எல்லை இல்லை என்பதே இப்பாடலின் புலவரது குறிப்பாகும். சேதுநாட்டு புலவர் சேதுகுடி எம்.கே.எம். அப்துல் காதிறு இராவுத்தர் என்பவர் தமிழ் வரலாற்றின் தன்னேரில்லாத நிகழ்ச்சியான இதனை மதுரைத் தமிழ்ச்சங்க மாண்மியம் என்ற இலக்கிய நூலாகப் படைத்தார். தமிழக வரலாற்றின் தனிப்பெரும் நிகழ்ச்சியாக அமைந்த தமிழ்ச்சங்கத் தொடக்கம் மன்னருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது; தமிழ்த் தொண்டில் புது முனைப்பை ஏற்படுத்தியது.

**பாஸ்கர சேதுபதியும், தமிழும் :**

பாஸ்கரர் காலத்தில் நவராத்திரி விழா ஒரு தமிழ் விழாவாகவே ஆண்டு தோறும் நடைபெற்று வந்தது. அப்பொழுது தமிழகம் முழுவதிலுமிருந்து புலவர் பெருமக்கள் அரசவையில் வந்து கூடுவர். தங்களது ஆழ்ந்த புலமையையும் சேதுபதி வழியினரது சிறப்பு இயல்புகளையும் அருங்கவிதைகளாக அமைத்து அரங்கேற்றுவர். இந்த நிகழ்ச்சி, திருமலை இரகுநாதசேதுபதி ஆட்சிக் காலம் முதல் அண்மைக் காலம் வரை நடைபெற்று வருகிறது. பாஸ்கர சேதுபதி மன்னரது ஆட்சிக் காலத்திலும் இந்த நிகழ்ச்சி, சிறப்பாக நடைபெற்றது. சேதுபதி மன்னரது கொடையினைப் பெற்றுத் தங்களது திறமைக்கு அரச முத்திரை பெறுவதற்கென்றே நூற்றுக்கணக்கில் புலவர்கள் இந்த விழாவிற்கு வருகை தருவது வழக்கம். அவர்கள் தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ப பரிசில்களை அளித்துப் பெருமைப்படுத்தி அனுப்புவது மன்னரது பழக்கம்.

நவராத்திரி விழா ஒன்றில் கலந்துகொண்ட டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள், பத்து நாட்களிலும் பொழுது போனதே தெரியவில்லை. சேதுபதி மன்னரது உபச்சாரமும், கவர்ச்சியான பேச்சும், கொடைப் பெருமையும் எனக்கு வியப்பை உண்டாக்கியது. இந்த

விழாவிற்கு இரண்டு லட்ச ரூபாய்க்கு மேல் செலவு ஆகியிருக்கும் என எழுதியுள்ளார். மேலும் பாஸ்கர சேதுபதி மன்னர் மீது ஐயரவர்கள் ஏராளமான வாழ்த்துப்பாக்கள் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேம்பத்தூர் வேம்பு ஐயர் என்ற பெரும்புலவர், தமிழில் இருபொருள்பட பேசுவதிலும், பாக்களைப் புனைவதிலும் சிறந்து விளங்கினார். இதனால் அவருக்குச் சிலேடைப்புலி என்ற பட்டமும் உண்டு. ஒருநாள் அவர் மன்னரது அவைக்கு வந்தார். அப்பொழுது புலவர்கள் பகுதியில் இருந்த அனைத்து இருக்கைகளிலும் புலவர்கள் நிறைந்து இருந்தனர். செய்வது அறியாது ஒரு நிமிடம் அவர் மலைத்து நின்றார். அவரை ஏளனமாக ஒரு புலவர் வேம்பு நிற்பதுதான் இயல்பு என்றார். நிலைமையைப் புரிந்த மன்னர் புலவரை அழைத்து தமக்கு அருகில் இருந்த இருக்கையில் அமரச் செய்து அவரைப் பெருமைப்படுத்தினார். மகிழ்ச்சியில் திளைத்த புலவர் அரசு அருகில்தான் வேம்பு இருக்கும் என்று சிலேடையாகச் சொன்னார். புலவரது திறமையான பதில் அவையில் இருந்த அனைவரையும் மகிழ்வித்தது.

இந்த நவராத்திரி விழாவில் சேதுபதி மன்னர் வழங்கிய விலை உயர்ந்த சாதரா என்னும் சிறப்பான இரண்டு பட்டாடைகளைப் பின்னர் திருவாவடுதுறை ஆதினகர்த்தரிடம் கொடுத்து அதற்கு விலையாக ஆதினத்தார் அளித்த ரூபாய் முந்நூறையும் சிலப்பதிகார பதிப்புச் செலவிற்குப் பயன்படுத்தியதாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தமது வாழ்க்கைக் குறிப்பில் குறித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த சிவசம்புக்கவிராயர் என்ற பெரும்புலவர், இத்தகைய நவராத்திரி கலைவிழாவின் பொழுது பாஸ்கர சேதுபதி கல்லாடக் கலித்துறை, பாஸ்கர பதிகம், பாஸ்கர சேதுபதி இரட்டை மணிமாலை, சேதுபதி நான்மணிமாலை ஆகிய சிற்றிலக்கியங்களைப் படைத்து அப்புலவருக்கு மன்னர் அகங்குளிரும் வண்ணம் அன்பளிப்புக்களை வழங்கி, அவரை இலங்கைக்கு வழியனுப்பி வைத்தார்.

### தமிழ்த்தொண்டன் பாஸ்கர சேதுபதி

தாயிற் சிறந்தவன் சேதுக்கதிபன் தமிழர் பிரான், வாயிற்சிறந்த புலவன், என்று தம்மை அடக்கமாகத் தெரிவிக்கும் மகாவித்துவான்

இரா. இராகவையங்காரை மதுரை மாநகரில் முத்துப்பல்லக்கில் வைத்து அவரைச் சுமந்து, புலவரைப் பெருமைப்படுத்தினார். தமிழ்மொழிக்கு தான் என்றும் தொண்டன் என்பதைப் புலப்படுத்தினார். இத்துடன் மட்டும் அமையவில்லை. 9-11-1901இல் மதுரை ஆவணப் பதிவு அலுவலகத்திற்கு அந்தப் புலவரை அழைத்துச்சென்று ஆண்டுதோறும் பல்லக்குச் செலவிற்கும், ஜீவியத்திற்கு நிவேதனமாக ரூ. 635/- பெறும் உரிமைப் பத்திரத்தையும் கைச்சாத்திட்டு பதிவு செய்து கொடுத்தார்.

சேர, சோழ, பாண்டியர்களுக்குப் பிறகு, சுத்தத் தமிழ் அரசர்களாகச் சேதுபதிகளே தமிழ்மொழியை வளர்ச்சியுறச் செய்பவர்களாகவும், தமிழ்ப்புலவர்களை ஆதரிப்பவர்களாகவும் இருந்து வந்துள்ளனர்.

**பாஸ்கர சேதுபதியும் விவேகானந்தரும்:**

சுவாமி விவேகானந்தர் அமெரிக்கப் பயணம் மேற்கொள்வதற்குப் பொன்னும் பொருளும் வழங்கி பயண ஏற்பாடுகளைச் செய்தவர் பாஸ்கர சேதுபதியாவார். சிக்காகோ நகரின் மிக்சிகன் சதுக்கத்தில் அமைந்திருந்த கலை அரங்கில் அவர் தமது கன்னிப் பொழிவினை அமெரிக்க நாட்டு சகோதர, சகோதரிகளே! என்று அன்புடன் தொடங்கிய உரை, அங்கு குழுமியிருந்த மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

நான்கு ஆண்டுகால வெற்றிப் பயணத்தை மேனாடுகளில் சிறப்பாக முடித்துவிட்டு நரேந்திரர், சுவாமி விவேகானந்தராகத் தாயகம் திரும்பினார். கொழும்புத் துறைமுகத்தை அடைந்த சுவாமிகள், யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து தென்மேற்குத் திசையில், இராமநாதபுரம் சேதுபதி மன்னரது துறைமுகமான பாம்பனுக்கு 20-01-1897 அன்று வந்து சேர்ந்தார். முன்னதாகவே அந்த ஊருக்கு வந்து சுவாமிகளுக்கான வரவேற்பு ஏற்பாடுகளில் முனைந்து காத்து இருந்த பாஸ்கர சேதுபதி மன்னர் பாம்பன் துறையில் தமது பரிவாரங்களுடனும், பக்த கோடிகளுடனும், பிரம்மாண்ட வரவேற்பு வழங்கினார். பரிதியின் ஒளியும் சென்றிடாத பரங்கியர் நாடுகளில் பாரதத்தின் மெய்யொளி பரப்பி வந்த அந்தத் தத்துவ வித்தகரது வரலாற்றுச் சிறப்புமிக்க வருகையைக் குறிக்கும் நினைவுச் சின்னம் ஒன்றையும் மன்னர் பாம்பனில் திறந்து வைத்தார்.

படகில் இருந்து கரையிறங்கிய சுவாமிகளது புனித பாதங்களைத் தமது தலையிலே வைத்து கரையிறங்குமாறு மன்னர் வேண்டிக்கொண்டார். இந்தியத் திருநாட்டின் சாந்தியும், சமாதானமும் நிறைந்த ஆன்மீகச் செய்தியினைப் பல்வேறு நாடுகளுக்கு எடுத்துச் சென்று பாரத நாட்டின் ஆன்மீகச் சிறப்பை மேலை நாடுகளில் செழித்து வளரச் செய்த திருவடிகள் அவை எனப் போற்றிப் பணிந்தார்.

**பாஸ்கரரின் பணி தொடர்கிறது :**

கி.பி. 1903 புத்தாண்டு பிறந்தது. பாஸ்கரர் சேதுபதி மன்னர், தெம்புடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படவில்லை. ஏற்கனவே அள்ளி அள்ளிக் கொடுத்துப் பழக்கப்பட்டுப்போன அவருக்கு, மேலும் மேலும் வழங்கி மகிழத்தக்க வசதி இல்லை என்ற கவலை போலும் ! அத்துடன் முந்திய ஆண்டு இயற்கை எய்திய சுவாமி விவேகானந்தரைப் பற்றிய சிந்தனைகள் அவரது உள்ளத்தில் ஓயாமல் வேதனையை நிறைத்து வந்தது.

இறுதியாக அமைதி தவழும் சூழ்நிலையில் அமைந்துள்ள கல்லிடைக் குறிச்சி மடத்தில், மவுனமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கும் மன்னருக்கு முதுகில் பிளவை எனப்படும் கட்டியொன்று ஏற்பட்டது. சிறிது சிறிதாக அதனால் வலியும் வேதனையும் அதிகமாகிக் கொண்டிருந்தது.

பலமுறை இராமநாதபுரம் அரண்மனையில் மன்னரைக் கண்டு மகிழ்ச்சியுடன் அளவளாவியும், தமது இசைத் திறமையைக் காட்டிப் பரிசில்களையும் பெற்றுவந்த முத்தையா பாகவதருக்கு மன்னரது நிலை மிகுந்த வேதனையை அளித்தது. மன்னர் ( மார்கழி - ஆருத்திரா தரிசனத் திருநாள் ) மிகுந்த சிரமத்துடன் காலைக் கடன்களை முடித்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டே பாகவதரின் மோகனராகத்தில் அமைந்த கீர்த்தனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார். பாகவதரும் உருக்கமாகவும், இனிமையாகவும் பாடி முடித்தார். மன்னருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே தமது கழுத்தில் அணிந்திருந்த நவகண்டி மாலையைக் கழற்றிப் பாகவதருக்கு அன்பளிப்பாக வழங்கினார். அவரது கரங்கள்தான் அந்த மாலையைக் கொடுத்ததே தவிர அவர் உயிர் ஏற்கனவே பாகவதர் பாடிய அந்த மோகன ராகத்தில் இழைந்து, குழைந்து இசையில் கலந்துவிட்டது.

# அணிசேரா இயக்கம்

## மாறிவரும் உலகக் கவலைகளும் புதிய சூழல்களும்

இந்திய மக்களின் வலிமையான உறவு மற்றும் ஒருமைப்பாட்டு உணர்வை எகிப்து மற்றும் அரபு உலகிற்குத் தெரிவித்துக் கொண்டு எனது உரையைத் தொடங்குகிறேன். மேதகு அதிபர் திரு. ஹோஸ்னி முபாரக் அணி சேரா இயக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்களது ஆழ்ந்த மதிநுட்பமும், திறமையான வழிகாட்டுதலும் நமது இயக்கத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும். உங்களுக்கு இந்தியாவின் முழுமையான ஆதரவு கிடைக்கும்.

கடந்த மூன்றாண்டுகளாக அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த மேதகு கியூபா அதிபர் திரு. ருவல் காஸ்ட்ரோ அவர்களுக்கும் எனது கனிவான பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரபு மண்ணில் சந்திக்கும் இந்தத் தருணத்தில் பாலஸ்தீன மக்களையும் அவர்கள் சந்தித்த பெரும் துயரங்களையும் என் மனம் நினைக்கிறது. பாலஸ்தீன பிரச்சனையில் நீடித்த மற்றும் அமைதியான தீர்வு ஏற்பட நமது இயக்கம் இன்னும் கூடுதலாகச் செயலாற்ற வேண்டும்.

### ஒரு தார்மீகப் படை

இந்த அணிசேரா இயக்கத்திற்கு அதனைத் தொடங்கிய அதிபர் டிடோ, பண்டித நேரு, அதிபர் நாசர் ஆகியோரது கண்ணோட்டத்தையும், இந்தக் கண்ணோட்டத்தை முன்னெடுத்துச் சென்ற அதிபர் பிடெல் காஸ்ட்ரோ மற்றும் திருமதி. இந்திரா காந்தி ஆகியோருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

1961ம் ஆண்டு நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் முதல் மாநாட்டில் இந்த இயக்கத்தின் நிறுவனர்களில் ஒருவரான இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு கூறியதை நான் இங்கு குறிப்பிடுகிறேன். இங்கு கூடியுள்ள நாடுகளின் சக்தி ராணுவ சக்தியோ அல்லது பொருளாதார சக்தியோ அல்ல. எனினும் இது ஒரு சக்தி. இதனை தார்மீக சக்தி என்று அழைக்கலாம் என்றார்.

இந்த வார்த்தைகள் இன்றைக்கும் உண்மையாக உள்ளன. அணி சேராமை என்ற யோசனை வளர்ந்து விரிவடைக்கூடியது. அது அழியக்கூடியது அல்ல என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. இதனை நாம் முன்னெடுத்துச் சென்று, இன்றைய சவால்களைச் சந்திக்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.

### அணிசேரா இயக்கம் மற்றும் அரசியல் விடுதலை

இந்த அணிசேரா இயக்கமானது காலனி உலகத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து அதன்மூலம் அரசியல் சமவாய்ப்பைப் பெற்றது. தங்களது புதிய அரசியல் விடுதலை பொருளாதார முன்னேற்றம், வறுமை, பசி, மற்றும் நோய் ஒழிப்பு




ஆகியவற்றை அளிப்பதுடன் தங்களது வளர்ச்சி நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உலகை வடிவமைப்பதில் தீவிரமான மற்றும் சம அளவிலான பங்கேற்பாளர்களாக இருப்பார்கள் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். இந்த நோக்கத்தை அடைவதில் நாம் இன்னும் வெகு தொலைவில் இருக்கிறோம்.

**உலகளாவிய பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி**

எந்தவொரு அணிசேரா அமைப்பின் உச்சிமாநாடும் தற்போது இருப்பது போன்று பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி உலகை பீடித்திருக்கும் நிலையில் நடைபெற்றதில்லை.

நமது நினைவில் உள்ளவரையில் இதுவரை இல்லாத அளவுக்கு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தில் இருந்து தோன்றியுள்ளது. எனினும் இது நமது இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்ற வளரும் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இந்தப் பொருளாதார நெருக்கடி வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலிமைப்படுத்தி, வளரும் நாடுகளின் ஏற்றுமதியை வெகுவாகக் குறைத்து மூன்றாவது உலக நாடுகளின் கடன் மற்றும் முதலீடுகளைக் குறைத்துள்ளது.

உலகமயமாக்கலின் பயன்கள் மற்றும் சுமைகள் நியாயமற்ற முறையில் வினியோகிக்கப்பட்டுள்ளதால், நமது பொருளாதாரம் இந்தப் பாதிப்புகளில் இருந்து மீள்வதை இன்னும் கடினமாக்கும். இந்த நெருக்கடிக்குப் பிந்தைய விளைவுகள் உரிய முறையில் நிர்வகிக்கப்படாவிட்டால், பணப்புழக்கம் கைவிடப்பட்டால் ஊக நடவடிக்கைகள் மீண்டும் தோன்றிவிடும். இதனால் நமது பொருளாதாரத்தில் பணவீக்கம் நீடித்திருக்கும் நிலை ஏற்படும்.

குறிப்பாக வளரும் நாடுகளில் இந்தப் பின்னடைவு நீடித்தால் ஏராளமான நமது மக்கள் மீண்டும் வறுமைக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படும். ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் கல்வியின் அளவுகளில் வீழ்ச்சி ஏற்படும். அதிக விலை கொடுத்தும் தியாகங்கள் செய்தும் நாம் ஏற்படுத்திய முன்னேற்றம் அழிந்து போய்விடும். புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகள் கானல் நீராகிவிடும்.

**ஜுலை 15, 2009 அன்று அணிசேரா நாடுகள் இயக்கத்தின் 15வது உச்சிமாநாட்டில் பிரதமர் ஆற்றிய உரை**

# தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை

முனைவர் அ.கா. அழகர்சாமி

தணிகைமணி, ராவ் பகதூர், வ.சு.செ. என்று பலவாறு அழைக்கப்படும் வ.சு. செங்கல்வராய பிள்ளை, தமிழுக்குச் செய்த தொண்டுகள் அளவிடற்கரியன. திருப்புகழ் பதிப்பாசிரியரான சிவஞானச் செல்வர், வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளையின் இளைய மகனான இவர், அன்றைய தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மஞ்சக்குப்பத்தில் 1883-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி பிறந்தார்.

1888-1891-ஆம் ஆண்டுகளில் அரசு ஊழியரான இவரின் தந்தையார் நாமக்கல்லில் பணியாற்றியதால், அங்குள்ள கழகப் பள்ளிக் கூடத்தில் தணிகைமணி மூன்றும் வகுப்பு வரை பயின்றார். அதன் பிறகு கும்பகோணம், திருவாரூர் மதுரை ஆகிய ஊர்களில் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். 1901-ஆம் ஆண்டில் சென்னை மில்லர் கல்லூரியல் பி.ஏ. தத்துவம் பயின்றார். பின்னர் அதே கல்லூரியில் எம்.ஏ. தமிழ் பயின்றார்.

தணிகைமணி, மாணவப் பருவத்தில் சாதனையாளராகவே திகழ்ந்தார். 1892-இல் நடந்த அரசு துவக்கப் பள்ளித் தேர்வு, 1896-இல் நடந்த உயர் துவக்கப் பள்ளித் தேர்வு, 1899-இல் நடந்த மெட்ரிகுலேஷன் தேர்வுகளிலும் முதல் வகுப்பில் தேறினார். இவை தவிர, சீனியர் எம்.ஏ., வகுப்பில் நடைபெற்ற தமிழ்த் தேர்வில் முதலாவகத் தேறினார். இதற்காக இவர் இராமநாதபுரம் மகாராணியார் வழங்கிய தமிழ்க் கல்வி உதவித் தொகையை இரண்டு ஆண்டுகளுக்கு மாதம் ரூ.4.50 என்ற அளவில் பெற்றார். இதே போல் பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெற்றார். Franklin Gell Gold Medal என்னும் பெயரில் பல்கலைக்கழகம் வழங்கிய பட்டத்தையும், கல்லூரி அளவில் வழங்கப்பட்ட சேதுபதி தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

1902-இல் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் கலந்துகொண்டு ரூ.50 பரிசாகப் பெற்றார். இவ்வாறு கல்வியில் சாதனையாளராக விளங்கிய தணிகைமணி, அலுவலகப் பணியிலும் தனது முத்திரையைப் பதித்தார். இவரது பணியைப் பாராட்டி ஆங்கிலேய அரசு ராவ் சாகிப், ரால் பகதூர் ஆகிய பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தது.

மரபான சைவக் குடும்பப் பின்னணியாலும், இவருக்குத் தமிழ் கற்பித்த தமிழாசிரியர்களான பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், கோபாலசாரியார் ஆகியோரின் தாக்கத்தாலும், இவர் தமிழ்ப் பணியின்பால் தம்மை இணைத்துக் கொண்டார். 1905-இல் அரசுப் பணியில் சேர்ந்த இவர், அலுவலகப் பணியையும், தமிழ்ப் பணியையும் ஒருங்கிணைத்துச் செய்தார்.

சிறுவயதிலேயே தனது தமையனாரிடம் யாப்பிலக்கணங்களைக் கற்றுக்கொண்ட இவர்,

*"கன்னனும் வேதனும் போற்றுமுருகா கவின் மணியே*
*விண்ணவர் கோன்தான் பதம்பெறச் செய்த செவ்வேலவனே*

*பெண்ணொரு பாகன் அளித்த குமரா பெருநிதியே*
*தண்ணருளே பொழி தேவே தணிகைத் தயாநிதியே"*

என்று முருகனைப் புகழ்ந்து பாடல்களைப் பாடியுள்ளார். திருத்தணிகை முருகனைப் போற்றும் பாங்கிலான இப்பாடல், தணிகைமணியின் தொடக்ககாலப் பாடல்களில் ஒன்று எனலாம். இவ்வாறு தனது குடும்பப் பன்னணி சார்ந்து தமிழார்வம் கொண்ட தணிகைமணி உரையாசிரியர், பதிப்பாசிரியர், மொழிப்பெயர்ப்பாசிரியர் எனப் பல தளங்களில் தமிழுக்காகத் தொண்டாற்றியுள்ளார். தணிகைமணி தான் வாழ்ந்த காலத்தில் ஏறத்தாழ நாற்பது நூல்களைப் படைத்துள்ளார். இவை பெரும்பாலும் முருகனைப் பற்றியனவாகவும், தேவாரத்தைப் பற்றியனவாகவும் உள்ளன.

தணிகைமணியின் படைப்புகளில் முன்னிற்பவை அவரின் முருகனைப் பற்றிய ஆக்கங்களாகும். திருத்தணிகைப் பிள்ளைத் தமிழ், தணிகைப் பதிகம், தணிகைத் தசாங்கம், வேல்ப்பாட்டு, சேவல்பாட்டு, கோழிக்கொடி, தணிகைக் கலிவெண்பா, திருத்தணிகேசர் எம்பாவை, திருத்தணிகேசர் திருப்பள்ளியெழுச்சி, மஞ்சைப் பாட்டு, வள்ளி திருமணத் தத்துவம், வள்ளி-கிழவர் வாக்குவாதம் முதலிய பல நூல்களைச் செய்துள்ளார்.

இவை தவிர, முருகனைப் பற்றிய பாடல்கள் அனைத்தையும் தொகுத்து, 'முருகவேள் பன்னிரு திருமுறை' என்ற தொகுப்பையும் தந்துள்ளார். இதனுள் திருப்புகழ் கந்தரலங்காரம், கந்தர நுபூதி, திருவகுப்பு, சேய்த்தொண்டர் புராணம் முதலியன உள்ளன.

தணிகைமணி, திருப்புகழுக்கு மிக எளிமையான உரையை எழுதிப் பதிப்பித்துள்ளார். 1951-ஆம் ஆண்டு முதல் இவரின் திருப்புகழ் உரை வெளிவரத் தொடங்கியது. இதை அவர், இதழ் போன்றே பகுதி பகுதியாக வெளியிட்டுள்ளார். இவரின் இம்முயற்சி பற்றித் தமது மதிப்புரையில் குறிப்பிடும் செந்தமிழ் இதழ், "தேவஸ்தானங்களும், மடாலயங்களும் போன்ற செல்வ நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய மிகப் பெரிய இந்நன் முயற்சியை, இதன் பதிப்பாளர் உலையாவூக்கமொடு இடையூறின்றி இனிது நிறைவேற்ற முருகப்பிரான் திருவருள் முன்னிற்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளது. (செந்தமிழ்-48, பகுதி 9-10, ப.239) எனவே, அவரின் திருப்புகழ் பதிப்பு முயற்சியானது தமிழ்ப் பதிப்பு வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெறுகிறது எனலாம்.

இவர் தமது திருப்புகழ் பதிப்பை, இடது பக்கம் பாடல் வரிகள், வலது பக்கம் பொழிப்புரை என்ற வகையில் பதிப்பித்துள்ளார். இவை தவிர, பாடல் வரிகளின் கீழ் முக்கியமான சொற்களுக்குக் குறிப்புரையையும் தந்துள்ளார். எண்கள், உடுக்குறிகள் முதலியவற்றைப் பயன்படுத்தி இந்தக் குறிப்புரைகளை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அமைத்துள்ளார். "தம்மைப் பூசை செய்திருந்த மார்கண்டேயரைப் பிடிக்க வந்த கூற்றைச் சிவபிரான் மாளும்படி உதைத்தனர். கந்தபுராணம் மார்க்கண்டேய படலம் பார்க்க" (தணிகைமணி செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ், ப.2, 22) என்று ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அடிக் குறிப்புகளைப் பயன்படுத்தியுள்ளார். இதனால், இவரின் திருப்புகழானது படிப்பதற்கு மிக எளிமையானதாகவும், ஆய்வாளர்களுக்குப் பயன்படுவதாகவும் உள்ளது.

தணிகைமணியின் மற்றுமொரு சிறந்த முயற்சி, தேவார ஒளிநெறி, தேவார ஒளிநெறிக் கட்டுரைகள், திருவாசக ஒளிநெறி, திருவாசக ஒளிநெறிக் கட்டுரைகளாகும். தேவாரத்திலுள்ள சொற்கள், தலங்கள், அரிய சொல்லாட்சிகள், அடியவர்கள் முதலியவற்றுக்கு அகர வரிசையில் விளக்கம் தந்துள்ளார். "திருத்தணிகேசனது திருவருளையே துணையாகக் கொண்டு தேவார ஒளிநெறி என்னும் பெயரோடு தேவாரத்துக்குப் பெரியதொரு ஆராய்சி எழுத விரும்பினேன். தேவராதத்தில் உள்ள பல பொருள்களையும், அவ்வப்பொருளின் வழியே அகராதி முறையாகத் தொகுத்து விளக்கிக் காட்டும் ஆராய்ச்சியே எனது சிற்றறிவுக்குத் தக்கதொண்டு எனக் கருதினேன். அத்தகைய கருத்துடன் சம்பந்தப் பெருமானது தேவாரத்தை ஆய்ந்து நானூற்று அறுபத்து ஆறு தலைப்புகளின் கீழ் விரிந்தொரு ஆராய்ச்சி அகராதி எழுதி முடித்தேன்" என்று தனது தேவார ஒளிநெறி பற்றி தன்னடக்கத்துடன் குறிப்பிடும் தணிகைமணி, தான் எடுத்துக்கொண்ட பணியை மிகவும் விரிவாகவே செய்துள்ளார்.

இவரின் தேவார ஒளிநெறியானது 466 தலைப்புகளில் மூன்று பாகங்களாகவும், அப்பர் தேவார ஒளிநெளளி 190 தலைப்புகளில் இரண்டு பாகங்களாகவும், அப்பர் தேவார ஒளிநெளளி 261 தலைப்புகளில் ஒரே நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தர் ஒளிநெறியில் 'பதிகப் பாகுபாடு' என்னும் தலைப்புக்கு விளக்கம் தரும் தணிகைமணி "இராவணனை அடர்த்தது எட்டாவது பாடலிலும், பிரமன், மால் இவர்களுக்ககு அரியவராய்ச் சிவபிரான் நின்றது (இருவர்கருமை) ஒன்பதாவது பாடலிலும், சமணர் முதலிய புறச்சமயத்தாரைப் பற்றிப் பத்தாவது பாடலிலும் சுவாமிகள் தமது பதிகங்களில் ஓதியுள்ளார். இந்த முறையில் வராத பதிகங்களின் விளக்கங் கீழ்க்காட்டுவன. ராவணன் (8-ஆம் பாடலில் சொல்லப்படாதது) 9-ஆம் பாடலிற் சொல்லப்பட்ட பதிகங்கள் (17) 39, 45, 57, 78, 90, 117, 127, 138, 142, 156, 204, 209, 210, 253, 316, 330, 368" என்று செறிவானதொரு விளக்கத்தைத் தருகிறார். இவ்வாறு ஒவ்வொரு தலைப்புகளும் செறிவானதும், நுட்பமான விளக்கங்களைத் தந்துள்ளார் தணிகைமணி, இதுபோல விளக்கவுரை தந்தவர் எவருமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது உரைநடையைப் பொறுத்தவரையில் அவை மிகவும் எளிமையானவை. வாசகனை அரவணைத்துச் செல்பவை. படிப்பார்வத்தைத் தூண்டக் கூடியவை. இவரது உரைநடை பற்றிக் கருத்துரைக்கும் கு. கதிரேசன், "உரைநடையில் இவருக்கு ஒப்பான செறிவு, இனிமை, தெளிவு, நயம் ஆகியவற்றின் இணைவை வேறு எவரிடத்தும் காண இயலாத அளவுக்குச் சிறந்த மொழி நடையைப் பெற்றவர்" என்று குறிப்பிடுகிறார். எனவே, தனித்துவம் மிக்க மொழிநடையின் மூலம் ஒரு செறிவார்ந்த உரைநடையத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் தணிகைமணி எனலாம்.

இவ்வாறு தமது வாழ்நாள் முழுவதும் தமிழ்ப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தணிகைமணி, 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு 25-ஆம் தேதி இயற்கை எய்தினார்.

இப்பூவுலகில் 88 ஆண்டுகள் வாழ்ந்த தணிகைமணி, தமது இளமைக்காலம், பணிக்காலம், ஓய்வுக்காலம் என அனைத்திலும் தமிழுக்காக, தமிழாகவே வாழ்ந்தவர். எனவே, வழிவழியாக வரும் தமிழ்ச் சான்றோர் மரபில் அவருக்கான இடம் ஓர் ஒளிநெறியாகவே இருக்கும் எனலாம்.

நன்றி : தினமணி - தமிழ்மணி 07-03-10

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/56 February 2010

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் [illegible]]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் [illegible]

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 22[illegible] [illegible] : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| இரா. அழகுமலை | முனைவர் க. சின்னப்பா | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

BUSINESS POST CENTRE
POSTAGE PRE PAID
25 MAR 2010
IN CASH
MADURAI H.O. 625001

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.